# ஜெயஸஞ்ஜீவி

துப்புறியும் நாவல்

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது

"ஜகன்மோகினி" காரியாலயம்,

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்.] 1934. [விலை அணு 4.

40
369
417-A/82

Sri Alagappa Chettiar Free Reading Room
Tiruppur

## முதல் அதிகாரம்

### வறுமைப் பேயால் வருந்தும் வனிதை

மதுரை
பால ஷண்முகானந்த சபா.



"தாமோதரன் வந்து விட்டான்! இனி நம் காரியத்தைத் துவக்கலாம்" என்றான் தாண்டவராயன். இதைக் கேட்ட மற்ற சகாக்கள் "ஹ ஹ் ஹ ஹா!" என்று பெரிதாக நகைத்து ஆரவாரித்து "வாருங்கள்! வாருங்கள்!" என்றார்கள்.

தாமோதரன் அந்த அற்புதமான சபையில் வந்து அமர்ந்தான். "நேயர்களே! இன்று என்ன வேலையைச் செய்யத் தீர்மானித்திருக்கிறீர்கள். இதை இப்போதே முடிவு செய்து கொண்டால் நமக்கு நிம்மதியாகிவிடும்" என்றான்.

தாண்டவ:—நண்பா! ஒவ்வொரு தினமும் நாம் புதிய புதிய வேலைகளைக் கண்டு பிடித்துச் செய்து வருகிறோம். இன்று நாம் செய்யப் போகும் வேலை இதுவரையில் செய்ததைவிட மிகவும் நூதனமான வேலை! வேடிக்கையும் தமாஷும் நிறைந்த வேலை; அதாவது நமது பிரபல வியாபாரி பீதாம்பரம் இருக்கிறாரே அவர் ஒரு நல்ல குட்டியைத் தமக்கு பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டார். அதற்கு யோசித்தேன்; நமக்கு முக்கியம் பணமல்லவா! பக்கத்துத் தெரு பார்வதியம்மாளின் மூன்றாவது மகளுக்கு ஒரு காது மூளி; அதோடு ஒரு காலும் சற்று சாய்கால்தான்; அந்தப் பெண்ணை யாரும் கட்ட மாட்டேனென்கிறார்களாம். அந்த அம்மாள் கவலைப் படுகிறார்கள். அந்த விடத்து காரியத்தை நாணயமாகவே முடித்துவிட வேண்டும். இன்றைய வேலை இதுதான்" என்றான்.

தாமோ:—நண்பா! அக்கிரமக்காரர்களுக்கு எதுவுமே அக்ரமம் செய்யலாம். பீதாம்பரம் அக்கிரமக்காரர் அல்லவே! அவருக்கு எவ்விதம் நீங்கள் கெடுதி செய்யலாம்; இது சரியா?

தாண்ட:—போடா போ! எந்த நேரமும் நீ தருமத்தையும், சாஸ்திரத்தையும் வைத்துக் கொண்டு மாரடிக்கிறாய்! அதுவெல்லாம் இக் காலத்தில் எடுக்காது; தர்மமாவது. நீதியாவது. நமக்கு இதுபரியந்தம் சோறு போடுவதெல்லாம் தருமமா! அதர்மமா! அதர்மம்தான் அன்னமிடும்; தர்மம் தடிபோல நிற்கும் என்று பெரிய உபன்யாசம் செய்

தான். இன்னும் சற்று நேரம் எல்லோரும் பேசிக் கொண் டிருந்து பின்னர் ஒரு வித தீர்மானத்துடன் கூட்டம் கலேந்தது.

தாமோதரன் வீட்டிற்கு வந்தான். அவனுக்கு மிகவும் இளம்பிராயத்திலேயே தந்தை இறந்து விட்டார்! அவ னுடைய தாயார் அவனிடம் உயிரையே வைத்திருப்பவள். அவர்களுக்கு நிலம் புலம் முதலிய வேறு எதுவுமே கிடை யாது. அவன் பிதா கொல்லத்து வேலே செய்து கொண் டிருந்தார். அதில் வரும் சொல்ப தொகையில் குடும்பத் தைச் சிக்கனமாக நடத்தி வந்தார்கள்; அவர் இறந்துவிட்ட பிறகு சிறு குழந்தையை வைத்துக் கொண்டு விதவையான போன்னம்மாள் என்ன செய்வாள் பாவம்! தாமோதரனுக்கு 5 வயது ஆகும் வரையில் பொன்னம்மாள் அந்தக் குழந் தையின்மீது கொண்டுள்ள பிரேமையின் பொருட்டு நாத்தி யின் வீட்டில் பட்ட கஷ்டங்களேக் கூறத் திறமன்று.

கணவன் உயிருடனிருக்குங் காலேயிலேயே நாத்தனர் என்கிற தேவதையின் தனி யாட்சியின் பரிபவம் கூறத் திற மற்று உலகில் விளங்குகின்றது எல்லோரும் கண் கூடாகக் கண்ட விஷயமாகும். கணவனே இழந்து, கதியற்றுத் தவிக் கும் பொன்னம்மாளே அந்த தேவதை என்ன பாடு படுத்தி யிருக்கும் என்பதைக் கூற வேண்டுமா!

வீட்டில் ஒரு வேலேக்காரியை வைத்துக் கொண்டால் அவள் கூட இத்தனே வேலேகளுக்கும், கட்டுப்பாடுக் களுக்கும் உடன்பட மாட்டாள். நமது பொன்னம் மாளோ அதற்கும் கடையளான பதவியில் நடத்தப் பட் டாள். நாத்தனரின் வீட்டிலிருக்கும் சகலரும் அவளே ஓர் மனித உருவம் என்றே எண்ணமல் நாய், கழுதை முதலிய ஜந்துக்களேப்போல எண்ணி நடத்துவார்கள்! தாமோதரன்

சிறு குழந்தை யாகையினுல் அழுதால் அதுவும் ஓர் பெரிய குற்றமாகி விடும்! உடனே நாத்தியாகிய நாகம்மாள் நாகப் பாம்பைவிட அதிகமான சீற்றத்துடன் பிரஸன்னமாகி "ஏண்டீ! பொன்னீ! வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமீது சாக்கு என்றதை நீ ரூபிக்கின்ருயா! இந்த பாச்சா இந்த நாகத்தினிடம் பலிக்காது. இந்த சனியனை அழ விட்டால் அழுதுகொண்டேதான் இருக்க வேண்டும். அழுது அழுது சாகட்டும்; இதனுல் வேலையைச் செய்யாது ஏய்த்து விடலாம் என்று எண்ணுதே!" என்று வாயில் வந்தவாறெல்லாம் திட்டுவாள்.

இந்தச் சொல்மாரி பொன்னம்மாளுக்கு தினம் கிடைக்கும் பிரஸாதமாகி விட்டது. அவள் உரத்துப் பதில் கூருது தன் விதியை எண்ணிக் காலத்தைக் கடத்துவாள். தான் என்ன விதமான கஷ்டங்களை அனுபவித்தாலும் தன் குழந்தைக்கு ஒரு குறைவு மின்றிக் காப்பாற்றினுல் போதும் என்பதே அவளுடைய கருத்து. அதற்காகவே அவள் சகல கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு தன் குழந்தையை 5 வயது வரையில் வளர்த்து வந்தாள்; வர வர இம்சை அதிகரித்து அவளால் தாங்கக் கூடாது போய்விட்டது. தன்னுயிரெனப் பாவிக்கும் குழந்தையைச் சதா திட்டுவதும் அடிப்பதும், பட்டினி போடுவதுமாக வதைக்க வாரம்பித்தாள். இந்த சங்கடம் அவளால் சற்றும் சகிக்க முடியவில்லை. தப்பித் தவறி என்ருவது "அக்கா! நான்தான் செக்கு மாடு போல உழைக்கிறேனே! எந்த வேலையாயினும் என்னிடமே பெற்றுக் கொண்டு இந்த பால் மணம் மாருத பாலகனை இம்சிக்காமல் விட்டு விடலாகாதா?" என்று கூறி விட்டாலோ, அன்று வீட்டில் நடக்கும் அமர்க்களம் மிதமிஞ்சிப் போய்விடும்.

பின்னும் சில காலம் சென்றது. "நான் என்ன சித்திர வதைக் குள்ளாயினும் பொறுப்பேன்! என் குழந்தையைச் செய்யும் இம்சைக்கு நான் சற்றும் பொறுக்க மாட்டேன். நான் இந்த வீட்டில் சொந்த மனிதர்களின் முன்னிலையில் இப்படி கஷ்டப் பட்டுக் குழந்தையையும் வருத்துவதை விட நாலு வீடுகளில் பிச்சை வாங்கியோ, பெருக்கி சாணி தெளித்து மெழுகிக் கோலம் போட்டு வேலை செய்தோ,— சுண்ணும்பு இடித்தும், செங்கல் தண்ணீர் முதலியன தூக்கிக் கொடுத்துச், சித்தாள் வேலை செய்தோ நம் குழந்தைக்குக் கால் வயிறு கஞ்சியை வார்த்து சந்தோஷமாய் வளர்க்கலாம். இந்த சனியன் பிடித்த வீட்டில் இம்சைப் படவேண்டாம். ஓடிவிட்டாள் என்ற கெட்டப் பெயரை நமக்குச் சூட்டி விடுவார்களே என்று அஞ்சி இதுகாறும் சகித்தேன். கடவுளறிய நாம் நிரபராதியாய் — பரிசுத்தமாய் — இருந்தால் போதும்; இவர்களுடைய கொடிய சிறையிலிருந்து தப்பிக்கும் வழியை இனித் தேடவேண்டும்" என்ற தீர்மானம் அவள் மனத்தில் வேரூன்றி விட்டது.

இதற்குச் சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்; தாமோதரனுக்குத் திடீரென்று ஜுரமும், வயிற்றுப் போக்கும் ஏற்பட்டது. அதற்கு ஒரு கஷாயங் கூட கொடுக்கச் சம்மதிக்காத நாகம்மாள் பின்னும் திட்ட வாரம்பித்தாள்: இதைக் கண்ட பொன்னம்மாள் மிகுந்த துக்கமடைந்து நாகம்மாளைப் பார்த்து "அக்கா! நான் இந்த 6 வருட காலமாக என் விதியை எண்ணி பட்ட கஷ்டங்கள் முற்றும் என்னுடைய இச் சிறு குழந்தையின் பொருட்டாகவே யன்றி வேறல்ல. அத்தகைய குழந்தைக்கு இத் தகைய ஆபத்தான உடம்பு வந்திருக்கையில் கூட நான்

இங்கு அதைக் கவனிக்க முடியாமல் அடிமை வேலை செய்ய இனி சகிக்கக் கூடவில்லை. இதுவரையில் என்னையும் என் குழந்தையையும் வைத்து சம்ரக்ஷித்ததற்காக மனப் பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்: நான் இம்மட்டுடன் போகிறேன்: என் குழந்தை பிழைத்தால் எனக்குப் போதும்: இல்லையேல் அவனுடன் என்னுயிரையும் மாய்த்துக் கொள்கிறேன்'' என்று கூறியவாறு அவர்களின் பதிலை எதிர் பார்க்காமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

இதைக் கேட்ட நாகம்மாள் "ஆகா! அடீ நன்றி கெட்ட பன்றியே! நாணங் கெட்ட நாயே! உனக்கு இத்தனை தலைத்திமிரா! உன்னை நான் இத்தனை வருடங்களாக வைத்து தண்ட பிண்டங் கொட்டியது போதாமல் இப்போது நான் படுத்தியதாக அவதூறையும் என்மீது சுமத்தி விட்டுப் போகிறாயா! நாணங் கெட்டவளே! இரு; இரு! உன் கதியைப் பார்க்கிறேன்:'' என்று சரமாரியான வசை மாரியைக் கொட்டித் திட்டினாள்:

பொன்னம்மாள் பதில் பேசாமல் கண்ணீர் வடிய குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டாள். நோய் கண்ட குழந்தையுடன் எங்கே செல்வாள் பாவம்! தர்ம ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்: அங்கு பட்டினியாய்த்தான் இரண்டு நாள் கிடந்தவாறு குழந்தைக்குச் சிகிச்சை செய்தாள்: குழந்தைக்குச் சற்று குணமாயிற்று. பிறகு கால் நடையாக வேறு ஒரு ஊரை அடைந்தாள். அங்கு சிலரை அண்டி சில வீடுகளில் வேலை செய்து வந்தாள்.

நாகம்மாளுக்கு இச் செய்தி தெரிந்ததும் அந்த வீடுகளில் இவளை வேலைக்கு வைத்துக் கொள்ளாமலிருக்க வேண்டி தன் வேலைக்காரர்கள் மூலம் அவர்களிடம்

பொன்னம்மாள் பெரிய திருடி என்றும், திருடிவிட்டுப் பலவிடங்களில் செருப்படி பட்டுச் சிறைவாசமும் செய்த பேமானி என்றும் கூறச் செய்து வேலையிலிருந்து தள்ளிவிடச் செய்தான்.

இந்த சூழ்ச்சியைப் பொன்னம்மாள் முற்று மறிய வில்லை எனினும் தன் நாத்தியால் விளைந்த கேடுதான் இது என்பது மட்டும் தெரிந்து கொண்டாள்: அதற்குமேல் என்ன செய்வாள்! சில வீடுகளில் பிச்சை எடுத்தும் சித்தாள் வேலை செய்தும், வீடு பெருக்கியும் காலத்தைக் கடத்த லானுள்: அதிலும் மண் விழுந்தது.

பொன்னம்மாளின் மகன் ஏழு வயதை யடைந்தான்; எனினும் நற் சகவாஸமா, படிப்பா எதுவுமே இல்லாமல் வீதியில் திரியும் பிள்ளைகளுடன் கோலி விளையாடுவதும், பளிசப்பளாம் ஆடுவதும் வீணே திரிவதுமாக ஆய்விட்டான். சதா சர்வ காலமும் உழைப்பிலேயே காலத்தைக் கழிக்கும் பொன்னம்மாள் அந்த பிள்ளையை முற்றும் கவனிக்க முடிவதில்லை. எனினும் இராக்காலத்தில் அவனைக் கண்டித்து துஷ்ட சகவாஸம் செய்யாம லிருக்கும்படி நற் புத்தி கூறுவாள்:

அதனுலும் அவளது குழந்தையின் புத்தி திருந்தவில்லை. "ஐயோ! நாம் இத்தனை கஷ்டங்களை யனுபவித்தும் இக் குழந்தையினுல் நமக்கு நற்காலம் பிறக்காது போய்விடுமோ! துஷ்ட சகவாஸத்தின் தோஷம் அவனை யழுத்திப் படுகுழியில் தள்ளிவிடுமோ!" என்று சதா சிந்தித்து வருந்துவாள். நற்சகவாஸம் படிவதற்காக அந்தப் பையனை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள்: பையன் அங்கு செல்வது போல பாவனை காட்டிவிட்டு விளையாடுவதற்கே சென்று விடுவான்.

சில தினங்கள் கழித்து இந்த திருட்டைப் பொன்னம்மாள் அறிந்துகொண்டாள்: நல்லதனத்திலும், கோபத்திலும் கூறிப் பார்த்தாள்; பலனில்லை. அதற்குமேல் பையனை ஓர் கடினமான வேலையில் புகுத்தி அவனை திருந்தச் செய்ய வேண்டும் என்று எண்ணினுள். அவளுடைய எண்ணம் முற்றும் தன் மகன் நல்ல நிலைமையை அடையவேண்டும், சத் சகவாஸத்துடன் புத்திமானுய் விளங்கவேண்டும் என்பதே.

ஒரு தினம் பையனை அழைத்து "அப்பா! தாமோதரா! உன் பொருட்டு நான் பட்ட கஷ்டமும், அடைந்த துன்பமும் கூறத் திறமன்று. நீ இவ்விதம் படிப்பு மில்லாது துன்மார்க்கர்களுடன் சகவாஸம் செய்துத் திரிவது என் மனத்தைப் புண்படுத்துகின்றது.நான் மட்டும் எத்தனை நாளைக்குத் தான் வேலை செய்து சிரமப்படுவது? நீ என்னவோ படிக்க மாட்டேனென்கிறுய்: வேலையாவது செய்து சம்பாதித்துக் கொடுத்தால்தான் இனி சோறு உண்டு, இல்லையேல் பட்டினிதான். இன்று முதல் இந்த ஊரில் குப்பை வாரும் தொழிலில் உன்னைச் சேர்த்து உன் பெயரும் கொடுத்துவிட்டேன். காலையும் மாலையும் குப்பை வண்டியுடன் சென்று குப்பை வாரினுல் மாதச் சம்பளமாக ஏதேனும் கொடுப்பார்கள். அதைக் கொண்டு உன் காலத்தைக் கடத்தலாம்: குப்பை வாரி பிழைப்பதற்கும் கையா லாகவில்லை என்றுல் அவமானம்: ஜாக்ரதை. இதோ! இந்த குப்பைக்காரன்தான் உன்னை யழைத்துச் செல்வான் ஜாக்ரதை; புறப்படு. உன்னை யழைத்துச் செல்லவே அவன் வந்திருக்கிறுன்." என்றுள்.

இதுவரையில் பையன் கோலியாடிக்கொண்டும், தெருவில் திரிந்தும் வந்ததால் ஒரு விதமான உணர்ச்சியு

மின்றி கட்டைபோல விருந்தான். குப்பை வாரும் தொழிலில் சேரவேண்டுமென்று கூறக்கேட்டதும் அப்படியே நடுங்கிப்போய்! "ஐயோ! நான் குப்பைக்காரனுகவா—...... வாருகிறவனுகவா—ஆகவேண்டும்?" என்று அலறிப்போய் தம்பித்து நின்றுவிட்டான்.

கல்யாண வீட்டின் ஆரவாரத்தைக் கேட்கவேண்டுமா! மேளமும், தாளமும், ஜனங்களின் அலங்கார அழகும், விவாக மண்டபத்தின் ஜோடிப்பும் மணமகன், மணமகள் ஆகிய தம்பதிகளின் கண்கொள்ளா சிங்கார வனப்பும் ஒருங்கு கூடி மக்களின் மனத்தைப் பரவசப் படுத்தியது. அத்தகைய விவாக வீட்டில் கணக்கற்ற பணியாள்கள் இருந்தனர். அவர்களில் நமது பொன்னம்மாளும் ஒரு வேலைக்காரி யாதலால் அங்கு அவளுக்கு சற்று நேரமேனும் ஓய்ச்சலே இல்லாமையினுல் அங்குமிங்கும் ஓடியாடி அலேந்து கொண்டே இருக்கிருள். ஆனுல் இடை இடையே அவளது விழிகளில் நீர் பெருகிக்கொண்டிருந்தது. அதற்குக் காரணம் என்ன விருக்கும்?

அவ்விவாகத்தில் சம்மந்தி வீட்டு உறவினளாய் நாகம்மாள் வந்திருந்தாள். அந்த அம்மாளின் கண்ணில் படாமலே பொன்னம்மாள் மறைந்து மறைந்து வேலே செய் துவந்தாள்; எனினும் தன்னைத் தெரிந்துகொள்ளாதிருக்கும் பொருட்டுத் தான் கீழே விழுந்து அடிபட்டதாகக் கூறி நெத்தியில் பத்து போட்டு கட்டு கட்டிக்கொண்டிருந்தாள். பெண்டுகள் எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் நாகம்மாளை நோக்கி ஒரு அம்மாள் "ஏனம்மா! உங்கள் உடன் பிறந்தான் ஒருவன் முன்பு..............

**நாகம்மா :**—ஆமாம்! இதற்கு இத்தனே இழுப்

பென்ன? அவன் காலந்தான் முடிந்துவிட்டதே! உம்! தங்கக் கட்டியைத் தணலாக்கி யாயிற்று.

வேறொருத்தி :—ஐயோ! பாவம்! அவருக்கு ஒரு குழந்தை இருந்ததல்லவா! அதுவும் அதன் தாயும் எங்கே இருக்கிறார்கள்?

நாகம் :—ஐயோ! அந்த வெட்கக்கேட்டைக் கேட்க வேண்டுமா? எல்லாம் குட்டிச்சுவராகிவிட்டது. அவனோடு பிறந்த பாசத்திற்காக நான் அந்த அனாதைகளை வீட்டில் வைத்திருந்தேன்! இதற்காக நான் என் மாமியார் நாத்தனார் புருஷன் முதலியவர்களிடம் பட்ட பாடு கொஞ்சமன்று. அந்த அல்ப முண்டையின் சகவாஸம் வெகு மோசமாயிருந்ததை நான் கவனிக்க வில்லை. வெட்கக்கேடு! என் பர்த்தாவையே அவள் வலையில் போட்டு என்னைத் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு நடத்த எண்ணினாள். இதற்கு அவளுடைய தறிதலை மகனே உள் கையாக விருந்தது. யார்தான் தன் வாழ்க்கையைப் பிறருக்கு மனமொப்பிக் கொடுப்பார்கள்! அவளுடைய ஆதிக்கம் நிலைக்கும் முன்னர் இவளை ஓட்டிவிடத் தீர்மானித்து ஓட்டியும் விட்டேன்! பிறகு சனியன் எங்கு சென்றதோ! எவ்விதமாயிற்றோ யார் கண்டது. இன்னொரு பிள்ளையும் பிறந்திருப்பதாயும், இன்னும் எங்கெங்கேயோ செருப்படி வாங்கியதாயும் கேள்வியுற்றேன்! காசுக்குதவாச் செருப்பு எப்படியாயின் என்ன பயன்! என்று அவர்களைப்பற்றி நான் கட்டோடு விட்டுவிட்டேன்!" என்று சற்றும் வாய் கூசாமல் கூறினாள்.

அப்போது அந்த இடத்திற்குப் பக்கத்து விடுதியில் உட்கார்ந்து பொன்னம்மாள் பலாப்பழத்தைத் திருத்தி சுளை எடுத்துக்கொண்டிருந்ததால் அவள் செவியில் இம்மொழிகள் யாவும் விழுந்தன. மனம் அப்படியே அன

லிடைப்பட்டமெழுகென உருகியோடிற்று. "ஐயோ! நம்விதி இவ்வித அபாண்டமான வார்த்தைகளைக் கேட்பதிலா வந்து முடிந்தது. ஹா! கடவுளே! உனக்கும் இவ்வுலகத்திற்கும் சம்பந்தமில்லையா! நான் பரிசுத்தமான இருதயத்தை யுடையவள் என்பதற்கு உன் மனச் சாட்சி சட்டம் இல்லையா! என்னுடைய நிரபராதித்தனம் உனக்கும் தெரியாவிட்டால் உன்னுடைய மகத்துவத்திற்கு என்ன பெருமையுண்டு? ஹா......என்னப்பனே! ஜகத்ரக்ஷகா! என் பேதைத் தனத்தை, அறிவீனத்தை மன்னிக்கவேண்டும்! என் விதியும் என் பாபமும் அன்றோ இவ்விதம் பழி கேட்கச் செய்தன?" என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு தனக்குள்ளேயே எண்ணுததும் எண்ணித் தவித்தாள். அக்காரணம் பற்றியே கண்ணீர் வடிந்துகொண்டே இருந்தது.

இந்த விவாக வீட்டில் நாகம்மாள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட ஏனையோரும் இதை நம்பியும் நம்பாமலும் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். பொன்னம்மாள் தனக்கு இவ்விஷயத்தில் சம்பந்த மிருப்பதாகவே காட்டிக் கொள்ளாமல் தன் விதியைத் துலைத்து வந்தாள். அன்று முதல் பொன்னம்மாளுக்குத் தன் மகன் விஷயமான கவலையே அதிகப்பட்டுவிட்டது. தன்னை வீணை பழி சுமத்தி வைப்பதற்கேற்பத் தன் மகனும் சோதாவாகிவிட்டால் தான் பட்ட சிரமம் முற்றும் விழலுக்கிறைத்த நீர்போலாய்விடுமே! என் செய்வது? உலகத்தில் ஒரு பெண்பிள்ளை அனுதையாக விருந்து பல விதமான கஷ்டங்களை யனுபவித்து ஒரு மகனைக் காப்பாற்றி விருத்திக்குக் கொண்டு வந்தாள்! என்ற பெயர் தனக்கில்லாது போய்விடுமோ! என்று ஏங்கினுள்.

இந்த ஏக்கத்தினுல் தான் முன்னதிகாரத்தின் இறுதி

யில் கூறியபடி குப்பைக்காரத் தொழிலை மேற்கொள்ளும் படி தன் மகனுக்குக் கூறினாள்! இதைக் கேட்ட தாமோ தரன் சில நிமிஷ நேரம் கல்லாய்ச் சமைந்துவிட்டான்; ஒன்றுமே தோன்றாமல் தவித்தான். “சீச்சீ! நாம் குப்பை வாரும் தொழிலைச் செய்வதா?” என்று வெறுத்தான். உடனே தன் தாயாரை நோக்கி, “அம்மா! நீ எத்தனையோ கஷ்டப்பட்டு என்னை வளர்த்ததாகக் கூறுகிறாயே! கடைசி யில் என்னைக் குப்பை வாரும் தொழிலில் விட்டு நீ வேடிக்கை பார்ப்பது உனக்கு தருமமா! இது மட்டும் தாயார் செய்யும் கடமையா!” என்று கேட்டு முறைப்பாக நின்றான்.

இதைக் கேட்ட பொன்னம்மாள் சற்று கோபத்துடன் “அப்பா! நான் என்னாலாகிய சகல வித மார்க்கங்களையும் பார்த்தாகி விட்டது. இனிமேல் நான் என்ன செய்யக் கூடும்? தான் ஜீவனம் செய்வதற்கு மோசம், திருடு, அனி யாயம் முதலிய எக் காரியமும் செய்யாமல் எவ்விதமான ஈனத் தொழிலைச் செய்வதிலும் குற்றமே இல்லை; அவமான மும் இல்லை. ஒவ்வொரு தொழிலுக்கும் தனி கௌரவ முண்டு. அப்படி அது அகௌரவமாகத் தோன்றினால் பட் டினிதான் கிடக்க வேண்டும். இல்லை! நீ உலகத்தவர்களைப் போல கண்ணியமாக வாழ வேண்டுமென்று நினைத்தா யானால் பள்ளிக்கூடத்தில் படிக்க வாரம்பி; சோதாக்களின் சகவாஸத்தை அறவே விட்டு ஒழித்து விடு. இவ்விரண்டு மில்லா விட்டால் கட்டாயம் குப்பைக்காரத் தொழிலில் உன்னையும் சேர்த்து நானும் சேரப் போகிறேன்; அந்தத் தொழிலை நீ செய்யாவிடினும் நான் செய்யப் போவதால் உன்னை எல்லோரும் குப்பைக்காரி மகன் என்றுதான் சொல்லுவார்கள். உன்னைக் கண்டு அருவருப்பார்கள்.

"அடேய்! விலகிப் போ! விலகிப் போ!" என்று அதட்டு வார்கள். நான் இத்தனை கஷ்டங்களையும் சகித்துக் கொள்வ தெல்லாம் உன் பொருட்டாகத்தான் என்பதை மறக் காதே." என்று கூறினாள்.

மூளையே கலக்க மடைந்து விட்டதுபோலப் பிரமித்து நின்ற தாமோதரன் விம்மி விம்மி அழத் தொடங்கினான். "அம்மா! நான்...வார மாட்டேன்! நீயும் குப்பைக்காரி யாக வேண்டாம்; நான் இன்று முதல் சமத்தாகப் பள்ளிக் கூடத்திற்குப் போகிறேன். ஏம்மா! எல்லார் வீட்டிலும் பையன்களுக்கு அப்பா இருக்கிறார்; சம்பாதிக்கிறார். நம்ப அப்பா எங்கே! ஏன் அவர் சம்பாதிக்காமல் நீ சம்பா திக்கிறாய்?" என்றான்.

பொன்னம்மா:—அப்பா! உனக்கு இக் கேள்வி கேட்ப தற்கு அறிவு வர இத்தனை வருடங்களாயிற்று! நீ பண்ணிய பெரும் பாவமும், நான் செய்த கர்மமும் ஒன்று கூடி உன் தந்தையை உலகினின்று ஓட்டி விட்டது. அவர் இறந்தத னாலேயே நான் பட்ட துன்பம் சகிக்கொணாது. உன் பொருட்டு படாத கஷ்டங்களைப் பட்டும் நீ தத்தாரியாய்—தறிதலையாய்—சோதாவாகி விட்டால் என் வயிறு எவ்விதம் எரியும். அதை நீ அறிய வேண்டாமா! நீ நல்ல புத்திசாலி யாய் சத் சகவாஸத்துடன் பிரகாசித்தால்தான் என் மனம் சந்தோஷ மடையும். இல்லையேல் நான் சொல்லாமல் கிணற் றிலோ, குளத்திலோ விழுந்து உயிர் துறக்க வேண்டியது தான். உன் விதிப்படி உனக்கு நடக்கட்டும். இதுதான் என்னுடைய தீர்மானம். அதை வெளியிட வேண்டாம் என்று எண்ணி இருந்தேன்; இன்று கூறிவிட்டேன்." என்றாள்.

இதுவரையில் ஏதோ மாதிரி இருந்த தாமோதரனுக்

குச் சற்று விசனமும், மனத்தில் அவனை யறியாத உணர்ச்சியும் உண்டாயிற்று. தாயை வணங்கி தான் இனி படிப்பதாகக் கூறி வாக்குக் கொடுத்தான். பொன்னம்மாள் சொல்ப சந்தோஷ மடைந்தவளாய் அவனை தர்ம பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள்; பையன் அன்று முதல் முன் போல மோசம் செய்யாது, விடாமல் படித்து வந்தான். எனினும் சினேகிதர்களுடன் சுற்றுவதை மட்டும் விடவில்லை. பொன்னம்மாள் எத்தனையோ சிரமப்பட்டு 8 வகுப்பு வரையில் அவனைப் படிக்க வைத்தாள். அதற்குமேல் ஒரு வருஷம் அவன் தோல்வி யடைந்து விட்டதால் அவனை இலவசமாகச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். பணங் கட்டினால் படிக்கலாம். பணம் கட்ட வகை யில்லாமையினால் நிறுத்தி விட்டாள்.

தாமோதரனுக்குத் தன் தாயாரிடத்து அன்பு மட்டும் குறையவில்லை. எனினும் நாம் முன்பு கதை யாரம்பத்தில் கூறியபடி துஷ்ட சகவாஸத்தை விடாமலிருந்தான். அவர்களுடன் சேர்ந்து செய்த வேலையில் கிடைக்கும் பணத்தை அவர்களைப்போல துர்விநியோகம் செய்யாமல் தாயாரிடத்தில் தான் வேலை செய்து சம்பாதித்ததாகக் கூறிக் கொடுத்து வந்தான். பொன்னம்மாளும் அது விஷயத்தில் மிகுந்த சந்தோஷமே அடைந்திருந்தாள்.

தான் செய்யும் தொழில் அக்கிரமம் என்பதை தாமோதரன் அறிவான். இருப்பினும் ஜீவனோபாயம் நடக்கும் வழி அதுவாகி விட்டதால். அந்தத் தொழில் விவரத்தைத் தாயாருடன் கூறாது அடியோடு ஒளித்து விட்டான்.

ஒரு தினம் பொன்னம்மாள் கடைக்குச் சென்று திரும்பி வருகையில் தாமோதரன் அந்த சோதாக்களுடன் திரிவதைக் கண்டு விட்டாள். "ஐயோ! இன்னும் இவன்

இவர்களை விடவில்லையே! என்ன செய்வேன்? இந்தச் சோதாக்களுடன் திரிந்தவாறு எப்படி சம்பாதிக்கிறுன்; அவர்களின் சகவாஸத்தின்படி மோசமாகச் சம்பாதிக் கிறுனே! என்று சிந்தித்தாள்; பிறகு வீட்டிற்குப் போய் விட்டாள்.

அன்று தாமோதரன் வந்ததும் "அப்பா! தாமோ தரா! நான் ஒவ்வொரு தினமும் உனக்குச் செய்யும் உபதேசமெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போ லாய்விட் டதே! சோதாக்களின் சகவாஸம் உதவாதென்று உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கிறேன். அவற்றைக் கேளாது நீ இன்னும் அவர்களுடனேயே இன்று கூடத் திரிந் ததை நான் கண்ணுல் கண்டேனே! தாமோதரா! அவர்க ளெல்லாம் கொலைக்கும் அஞ்சாத பாதகர்கள். அவர்க ளுக்கு அக்கிரமத்தைத் தவிர வேறு தெரியவே தெரியாது. அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் விஷம் போன் றதே யாகும். அவர்களை உலகத்தோர் இழிவாகக் கூறுவ தைக் கேட்க என்ன வெறுப்பாக விருக்கிறது. அந்த கோஷ்டியில் நீயும் கூடி இருந்தால் உன்னையும் அது பாதிக் காதா! ஐயோ! நான் எண்ணி எதிர் பார்த்ததெல்லாம் வீணுகி விட்டதே!" என்று பொன்னம்மாள் கண்ணீர் விட்டாள்.

தாமோ:—ஏனம்மா நீ விசனிக்கிறுய்? நான் நம் குடும் பத்தை சம்ரக்ஷிக்க வில்லையா! நான் சம்பாதிக்காமல் சோம் பேறியாகத் திரிய வில்லையே! அவர்களை நீ ஏன் நிந்திக்கிறுய்? இத்தனை நாளாக நாம் சாப்பிடுவது அவர்களால்தான் என்ற ரகஸியத்தை நான் இன்றே கூறுகிறேன். வயிற்றுப் பிழைப்பு நடத்துவதற்கு ஆதாரம் வேண்டாமா? இக் காலத் தில் எத்தனையோ படித்தவர்களெல்லாம் வேலை கிடைக்காது

திண்டாடுகிறார்கள்! என்னைப்போல சொல்ப படிப்பாளிக ளின் பாடு எப்படியாவது?. அம்மா! இந்த விஷயமெல்லாம் ......என்று இழுத்துக் கூறி முடிப்பதற்குள் பொன் னம்மாள் அலறியவளாய் "ஐயையோ! குடி கெட்டுவிட் டதே! அடே பாவி!;நீ ஏதோ தொழில் செய்து சம்பாதிப்ப தாகச் சொன்னதெல்லாம் சுத்தப் புளுகா! அவர்களுடன் சேர்ந்து திருடியும், கேவலமான தொழிலைச் செய்தும் இவ் விதம் நீ வயிறு வளர்க்காவிடில் பிராணனை விட்டிருக்க லாமே! உம். இனி உனக்குச் சொல்வதும், இந்த சுவருடன் சொல்வதும் ஒன்றேயாகும். எத்தனை குடிகளைக் கெடுத்தும், கற்புள்ள மங்கைகளின் வயிறை எரித்தும், அவர்கள் மனந் தவிக்கச் சாபமிட்டுத் தாக்கியும் சம்பாதித்து வந்த பொரு ளும்—அதனால் தின்ற சோறும்—நரகலுக்கு ஒப்பானதே யாகும்: நரகலைத் தின்று வயிறு வளர்த்தாயிற்றே யன்றி வேறு இல்லை. நான் முன் செய்தபடி என்னுயிரை மாய்க்க வேண்டியதுதான் மிச்சம்'' என்று ஏதேதோ திட்டினாள்.

தாமோதரனுக்கு மீண்டும் குழப்ப மேற்பட்டது. அவன் முன்பு சிறுவனாக விருந்தான்: இப்போது பெரிய ஆண்பிள்ளை யாகிவிட்டான். ஆதலால் கவலை யதிகரித்து விட்டது. தன் தாயார் சொல்வதெல்லாம் ஒரு சமயம் பார்த்தால் சரியாயும் ஒரு சமயம் பார்த்தால் குற்றமாயும் தோன்றுகிறது. இதற்குத் தான் என்ன செய்வது. நமக் காக அந்த அம்மாள் பட்ட சிறுமையை எண்ணிப் பார்த் தால் தான் தன் சரீரத்தை அந்த அன்னைக்குச் செருப்பாகத் தைத்துப் போட்டாலும் போதாது என்ற எண்ணமும் உதிக்கிறது. தன் தாயாருக்கு விஷயம் தெரிந்துவிட்ட பிறகும் தான் அவளுக்கு விரோதமாக நடந்தால் ஒருகால் அவள் உயிரை விட்டுவிடுவாளோ! என்ற பயமும் பாதிக்

கின்றது. ஒரு விதமும் தோன்ருமல் அச்சமயம் வேறு எந்த விதமான பதிலும் கூருது மவுனமாகவே சென்று விட்டான்.

அன்று பொன்னம்மாள் வீட்டில் சமையலே செய்ய வில்லை: இந்த மகனைத் தான் எவ்விதம் திருத்தக்கூடும் என்கிற ஓர் பெரிய யோசனையிலேயே மூழ்கித் தன் போக்காக அழுதவாறு படுத்திருந்தாள்: பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அந்த சோதாக்களைப் பற்றி யார் யார் என்ன விதமாகத் திட்டுகிருர்கள் என்பதைக் கண்டறிந்து தாமோதரனையும் ரகஸியமாக உடனழைத்துச் சென்று நேரிலேயே காட்டி "அப்பா! பேமானிகளின் பவிஷைப் பார்த்தாயா! அவர்களுக்குள்ள மரியாதை யன்றே உன்னையும் சாரும்! இந்த உத்தமியின் வயிறெரிய இவள் புருஷனுக்கு தாசி வீட்டுப் பழக்கத்தை உண்டாக்கி குடியைக் கெடுத்ததன் விபரம் பார்த்தாயா! இந்த அம்மாள் இனி என்ன செய்வாள்? உங்களைச் சாபமிட்டுத் திட்டி விட்டுத் தன் பிராணனை மாய்த்துக் கொள்வதாகக் கூறியதைக் கேட்டாயா! இந்த உத்தமி அனுயாஸ மரணம் அடைந்தால் அந்த பாபம் யாரைச் சேருமென்று நினைக்கிருய்? அவை முற்றும் உங்களையே சாரும். மனித சமூகத்தில் நீங்கள் பகிரங்கமாகக் கொலை செய்யவில்லை என்று நினைத்து நீங்கள் இறுமாப்பு அடையலாம். ஆனல் கடவுளின் முன்னிலையில் நீங்கள் கொலையாளிகளே யாவீர்கள். அவரிடத்தில் மறைக்கவும் உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டவும் ஒருகாலும் முடியாது. இப்படிப்பட்ட கொடுமைகள் எத்தனை இடங்களில் செய்திருப்பீர்கள் என்பதை நீயே சிந்தித்துப் பாரு" என்று கூறி, அடுத்தடுத்து சில சம்பவங்களை நேரிலேயே காட்டினுள். தாமோதரனை வெளியி லனுப்பாமல் காவலிருப்பது

போல விருந்து அவனை வீட்டிலேயே மடக்கிப் போட்டு நற் புத்திகளைப் புகட்டினுள்; உபதேசங்களைச் செய்தாள்: தன் மகன் நல்வழிப்பட்டால்தான் தான் ஜீவிப்பது; இல்லையேல் மரிப்பது என்ற உறுதியைக் கூறிவிட்டாள்.

தாமோதரனின் மனம் இரு வகையிலும் செல்லாது குழம்பிநின்றது. தாயாரின் உயிரைக் காப்பாற்ற வேண்டுவதே தன் கடமை என்றதைமட்டும் அவன் தீர்மானமாகக்கொண் டான். தன்னுடைய சிநேகிதர்களோ நிமிடத்திற்கு நிமிடம் வந்து கூப்பிடுகிருர்கள்; தாயாரோ கண்டித்ததுடன் அவர்க ளின் நேசத்தினல் விளையும் கேட்டை விளக்கிக் காட்டியும் இருப்பதால் அவன் முகம் மாறுதலையே அடைந்தது. ஆத லால் இனி தான் பிச்சை எடுத்தேனும் நன்மார்க்கத்தில் ஒழுகுவதாகத் தாயாருக்குச் சத்தியம் செய்து கொடுத் தான். அதன் பிறகே பொன்னம்மாளுக்கு மனது சற்று நிம்மதியாயிற்று.

ஒரு தினம் பொன்னம்மாள் தன் மகன் ஜீவனத்திற்கு வகை தெரியாமல் தவிப்பதைப் பார்த்துக் கண் கலங்கினுள்: எந்த விதம் ஜீவனத்திற்கு ஆதாரம் கிடைக்குமென்று ஏங்கி னுள். தன் பாட்டனரின் பூர்வீகமான பட்டிக்காட்டிற்குச் சென்ருல் வயலில் உழும் வேலையாவது ஏதேனும் கிடைக் குமோ என்கிற எண்ணம் உண்டாகியது. ஆதலால் தாமோ தரனையும் உடனழைத்துக் கொண்டு கால் நடையாகவே நடந்து அந்த கிராமத்தை யடைந்தாள்.

தன் பாட்டனரின் வம்சமே விளங்காமல் பூண்டற்று விட்டதால் அவருடைய வீட்டில் அன்னியர் வாசம் செய்து கொண்டிருந்தார்கள். அக் காலத்தில் இவளுடைய பாட்டனர் நாட்டு வைத்தியம் செய்யும் முறையில் மிகவும் பிரக்யாதியுடன் விளங்கினரெனினும் அவருடைய காலத்

திலேயே அவருக் கேற்பட்ட கஷ்டம், நஷ்டம், தேக அசவுக்யம் முதலிய பல விதமான தொந்திரவால் வைத்தியத் துறையில் உழைக்கக் கூடாமல் போய்விட்டது. அதை அப்படியே விட்டுவிட்டார்கள்: அக்காலையில் பொன்னம்மாள் மிகவும் சிறியவளாகையினுல் ஏதோ கனவு கண்டதுபோல நினைவிருந்தது. பொன்னம்மாளின் தாயார், பாட்டி முதலியோர்கள் சிறிய வயதில் இறந்து விட்டதனுலேயே பொன்னம்மாள் நாத்தியிடம் நலிய நேர்ந்தது.

அந்த கிராமத்திற்குச் சென்றதும் பொன்னம்மாளுக்குத் தான் பாலியப் பருவத்தில் இந்த வீட்டிற்கு வந்திருந்ததும் விளையாடியதும் சகலமும் நினைவிற்கு வந்தது. அந்த வம்சத்திற்குத் தன்னை யொருத்தியைத் தவிர வேறு இல்லாது போய்விட்டதே! கடன்காரர்களின் தொல்லையினுல் கொஞ்சம் நஞ்சம் இருந்த பூமியும் வீடும் போய்விட்டதே! என்று எண்ணி விசனித்தாள். அவ்வீடு முற்றும் சுற்றிப் பார்த்தாள்.

தன் பாட்டனுரின் தகரப்பெட்டி யொன்று அங்கு ஓட்டையாகிக் கிடந்ததாக அவ் வீட்டுக்காரர்கள் கொண்டு வந்து "இதுதான் இந்த வீட்டுக்காரரின் பெட்டியாம்; அவருக்கு எதோ கெட்ட வியாதி வந்து இறந்துவிட்டாராம்! அவருடைய ஓலைச் சுவடிகளும், சில கந்தைத் துணிகளும் இதில் கிடக்கின்றன. இதை எடுத்து நெருப்பில் போட்டுவிட நினைத்தோம்; அதற்குள் இவ்வூர் மணியக்காரர் அதைத் தடுத்ததோடு 'கிழவரின் பேத்தி ஒருத்தி இருக்கிருள்; அவளிடம் அதைக் கொடுப்பதுதான் நியாயம் என்று கூறினர். நீங்கள் யார், எங்கே இருப்பது என்கிற விவரமே தெரியாம லிருந்ததால் இதைப் பரண்மீது போட்டுவிட்

டோம். குப்பைக்குக் கூட உதவாத சாமான்கள்தான் அதிலிருக்கின்றன. என்று" கூறினர்கள்.

அதைக் கேட்ட பொன்னம்மாவுக்கு மிக்க விசன முண்டாகிவிட்டது. 'இப்படி வமிசமே இல்லாது போய் விடுமா!' என்று வருந்தியவாறு அப்பெட்டியை அப்படியே எடுத்துக்கொண்டாள். அங்கு வேலைக்கு ஏதேனும் ஆதாயம் கிடைக்குமோ என்று அலைந்ததெல்லாம் வீணுயிற்று. "இங்கிருப்பவர்களுக்கே வேலை யகப்படாமல் தத்தளிக்கையில் வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு எவ்விதம் வேலை கொடுக்க முடியும்? விளைவு வாசி ஒன்றுங்கிடையாது. கிஸ்தி கட்டுவதற்கும் திண்டாட்டமாக இருக்கிறது" என்று கூறி யனுப்பிவிட்டார்கள்.

பொன்னம்மாள் தன் போதாக் காலத்தை எண்ணி மீண்டும் தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தாள். தான் கொண்டு வந்த பெட்டியை முழுதும் கிளறிப் பார்த்தாள். அதில் கிழிந்துபோன புத்தகங்களும், ஓலைச் சுவடிகளும் கிடந்தன! அவைகள் புராண விஷயமான புத்தகங்கள். அப்பெட்டியை முற்றுங் கிளறுகையில் அதன் அடிப்பாகத்தில் ஏதோ ஒரு விதமான மேடு தட்டுப்பட்டது. அதிலிருந்து அப்பெட்டியில் கள்ள அறை இருப்பதாகத் தெரிந்துகொண்டு தன் வீட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு அதை நன்றுகக் கவனிக்கத் தொடங்கினுள்.

பெட்டியை நாற்புறமும் திருப்பியும் ஆட்டியும் பார்த்து அந்த கள்ள அறையைத் திறந்துவிட்டாள். அதற்குள் பணமிருக்குமோ என்கிற பேராவலுடன் திறந்தாள். இவள் எண்ணியபடி இல்லாது ஒரு கவரும் காகிதமும் இருந்ததைக் கண்டாள். பெரிய ஏமாற்றத்தை யடைந்துஅதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினுள். அது

ஓர் பெரிய மகா யோகியினுல் கூறப்பட்ட அவுடதங்கள் செய்யும் முறைகளும், மூலிகைகளின் பெயர்களும், அவை எங்கெங்கு கிடைக்கும் என்றதும் விவரமாக எழுதிய கடித மென்பதை யறிந்தாள்! அதைப் படித்ததும் முதலில் பொன்னம்மாளுக்குச் சந்தோஷமே உண்டாகவில்லை. "ஆமா! இந்த ஆகாத காரியத்திற்கு இத்தனை பந்தோபஸ்தும், கவரும் எதற்கு?'' என்று வெறுப்புற்றுக் கூறியவாறு அப்படியே போட்டுவிட்டாள். பிறகு சற்று நேரங் கழித்து அதைக் கவனித்தாள். அதோடு மற்றொரு கடிதமிருந்தது. அது பின் வருமாறு :—

"இந்த அவுடத முறைகள் சாமானிய அல்பர்களால் தயார் செய்யப்பட்டவையல்ல! இவை மகா யோகியொருவரால் தயார் செய்தவை! அந்த யோகி இவற்றைத் தாமே கண்டுபிடித்துக் கையாண்டு வந்தார்! அவருடைய காலத்திற்குப் பிறகு இவற்றை யோர் அறிவற்ற பெண்மணி தன் வசமடைந்தாளாதலால் இவற்றின் மகிமையை உணராது அசட்டையாய்ப் போட்டுவிட்டாள். நான் அக்காலை நாட்டு வைத்தியம் செய்து கொண்டிருந்ததால் அந்த அம்மாள் வீட்டிற்கு வைத்தியம் செய்யும் முறையில் சென்றேன்; அப்போது மேற்படி பரம அவுடதங்களின் முறைகளடங்கிய காகிதம் இருந்ததைக் கண்டு அம்மாளிடம் கேட்டு பெற்றுக்கொண்டு வந்தேன்! இந்த மருந்துகளைத் தயார் செய்வதற்குள் எனக்குப் பலவிதமான கஷ்டங்களும் நஷ்டங்களும் வந்துவிட்டன. நாளுக ச்வாதீனமாய் எந்த காரியத்தையும் செய்ய முடியாத விதமாய் வியாதியும் வந்துவிட்டது. பிறரைக் கொண்டு இதைத் தயார் செய்ய எண்ணினேன். அந்த மனி

தன் என்னையே மோசம் செய்துவிடவும், தானே அதன் லாபத்தை யடையவும் எண்ணினன். உடனே நான் கண் விழித்துக்கொண்டேன். எனக்கு ஒரு கால மில்லாவிட்டால் ஒரு காலத்திலாவது கஷ்டம் விடியாதா, அப்போது செய்துகொள்ளலாம் என்று நான் இக்காகிதத்தை உடனே ஒரு பெட்டிக்குள் கள்ள அறையில் பத்திரப்படுத்திவிட்டேன்! அதை என்னிடம் இருப்பதை யறிந்த மேல்படி ஆசாமி அதைத்தான் பெறுவதற்கு எத்தனையோ முயற்சி செய்தான். என்னைப் பல விதத்திலும் மிரட்டிப் பார்த்தான். ஒன்றிற்கும் நான் அசையவில்லை. இந்த முறை இந்தப் பாவியைத் தவிர வேறு யாரிடம் கிடைத்தாலும் எனக்குச் சம்மதந்தான். அவனுக்குக் கிடைக்கக் கூடாதென்று எனக்குத் தோன்றிவிட்டது. அவனுல் எனக்கு எப்போது என்ன தீங்கு நேருமோ என்ற பயம் என்னைச் சூழும்படியாக அவன் செய்துவிட்டான். ஆதலால் இக்கடிதத்தையும் எழுதி வைக்கிறேன். இது யாரிடம் அகப்பட்டாலும் என் சந்ததி யாரில் யாரேனும் இருப்பின் அவர்களிடம் சேர்ப்பிக்கவும். ஒருவருமே இல்லையெனில் இதைக் கண்டு எடுக்கும் யாராயினும் இந்த மருந்துகளைத் தயார் செய்யும் முன்பு "ஜேயவீர யோகியார்" என்றவரே இதைக் கொடுத்தவராதலால் அவருடைய ஞாபகச் சின்னமாக அவரை ஆவாஹனம் செய்து, பூஜை பண்ணி அதற்கு மேல் ஆரம்பித்துச் செய்யவேண்டும். இது முக்கியமான வேலை என்பதை மறக்கவேண்டாம். எனக்கு அதற்குள் சரியாகிவிடின் நானே இவற்றைச் செய்வதில் தடை இல்லை. ஆண்டவனருள் எப்படியோ!

சாமிநாதன்
வைத்தியன்."

என்றதைப் படித்ததும் பொன்னம்மாளுக்கு ஒரு புதிய உணர்ச்சி வந்தது. அவளுடைய சிறிய பிராயத்தில் கண்ட பாட்டனாருடைய உருவம் எதிரில் தோன்றி காட்சி கொடுப்பதுபோன்ற தோற்றம் உண்டாகியது. அவளையறியாது பழங்கதைகளை எண்ணியும், கடிதத்தைப் படித்த மனோவேகத்திலும், உருவத்தைக் கண்ட உணர்ச்சியிலும் அப்படியே கலக்கமும், குழப்பமும் அடைந்து ப்ரமைகொண்டு விழுந்துவிட்டாள்.

---

## 2-வது அதிகாரம்

## தாயாரின் ஜெயம்—தீயோரின் பயம்

தாமோதரன் தனக்கு ஏதேனும் பிழைப்பு கிடைக்குமா என்று சுற்றி யலைந்துவிட்டு, வீட்டிற்குள் வந்து சேர்ந்தான். தன் தாயார் அலங்கோலமாய் ஸ்மரணை யற்றுப் படுத்திருப்பதைப் பார்த்து அவனையறியாது விசனமுண்டாகிவிட்டது. அக் கடித விஷயம் எதுவும் அவனறியமாட்டானாகையினால் தாயாருக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது என்று பயந்துபோய் "அம்மா! அம்மா!" என்று எழுப்பினான்; தண்ணீரைத் தெளித்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் பொன்னம்மாள் கண்ணைத் திறந்தாள். "அப்பா! தாமோதரா! அதோ உன் பாட்டனாரின் தரிசனம் பாரு! தரிசனந் தண்டேன்! கலங்கிவிட்டேன்!" என்றாள். இதைக் கேட்ட தாமோதரனுக்குப் பின்

னும் பயமதிகரித்துவிட்டது. "அம்மா! உனக்கு என்ன உடம்பு! ஏன் இப்படி இருக்கிருய்! பாட்டனுர் யாரு! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்ருன்.

பொன்னம்மாள் சற்று தெளிவடைந்து "அப்பா தாமோதரா! பயப்படாதே; எனக்கு உடம்பு ஒன்றுமில்லை; நான் பிறந்த நாள் முதல் இன்று வரையில் கடவுள் என்னை சோதனை என்கிற சாகரத்திலேயே தள்ளி வாட்டிவிட்டார். அக்கடவுளே இப்போது உன் பாட்டனுர் மூலம் நமது பிழைப்புக்கு வழி காட்டி இருக்கிருர்! எனக்குள்ள பல நிர்ப்பந்தங்களில் சிறிது எழுத்து வாசனையை என் தாயாரும் உன் தந்தையும் ஊட்டியதனுல் இதைக் காணவும், படிக்கவும் ஏற்பட்டது. அந்த அம்மாளைப்போல எனக்கும் எழுத்து வாசனையே இல்லாமலிருந்திருக்குமாயின் நானும் இதை உதாசீனமே செய்திருக்க நேர்ந்திருக்கும். கல்வி உதவும் உதவியைப் பார்த்தாயா! இதோ இக்கடிதத்தைப் படித்துப் பாரு!" என்று கொடுத்தாள்.

தாமோதரன் கடிதத்தைப் படித்ததும் பரமாநந்தமடைந்தான். அந்த அவுடதம் தயாரிக்கும் முறையையும் பார்த்தான்! அதில் ஒன்றும் அவனுக்குப் புரியவில்லை எனினும் தமக்குப் பிழைக்கும் வழி கிடைத்து விட்டதை எண்ணிச் சந்தோஷமடைந்தான்.

பொன்ன:—அப்பா! இதைப் பார்த்தாயா! உனக்கென்ன தோன்றுகின்றது. நாம் நமது நாட்டுப்புறத்திற்குச் சென்றதாலன்றே இவ்வரிய கடிதங்களைக் கண்டு எடுக்க நேர்ந்தது. இது நம்மிடமிருப்பதே வெளியாருக்குத் தெரியலாகாது. இது அத்தனை பரம ரகஸியமாக விருக்கவேண்டும். ஏனெனின் நீ சற்று அசட்டுத்தனமாய் இதை சோதாச்

சிநேகிதரிடம் கூறிவிட்டால் நமக்கு ஆபத்தே விளைந்து விடும். ஜாக்ரதை; ஜாக்ரதை!

தாமோ:—அம்மா! நான் அப்படி ஒருவரிடமும் கூற மாட்டேன்! தாய் சொல் துறந்தொரு வாசகமில்லை என்கிற பழமொழியை நான் இப்போதுதான் அறிந்தேன்! என் சிநேகிதர்களாக விருந்த பேய்களிடமிருந்து நீ என்னை அத்தகைய நிபந்தனை செய்து விலக்காதிருப்பின் நானும் கைதியாகி இருப்பேன். அவர்கள் செய்த திருட்டும், மோசமும் வெளியாகி அவர்களைக் கையும் மெய்யுமாகக் கைது செய்து கொண்டு போய்விட்டதை இன்று நான் கண்ணாரக் கண்டதும் தேகமே சிலிர்த்தது. என்னையும் இப்பேராபத்து வந்து தாங்கி இருக்குமே! அதிலிருந்து என் மாதாவாகிய தெய்வமன்றோ காப்பாற்றியது?'' என்று எண்ணி எண்ணிச் சந்தோஷமும் பெரு மகிழ்ச்சியும் அடைந்தேன்! அம்மா! நீ கீறிய கோட்டிற்கு நான் இனி தாண்டமாட்டேன்! நீ என்ன சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்; இது சத்தியம்'' என்றான்.

பொன்னம்மாளும் நிரம்ப சந்தோஷமடைந்து மகனின் புத்தி திருந்தி அறிவு இன்னதென்று அறிந்துகொண்டதற்கு மகிழ்ந்தாள். தன் மகனுடன் மலையடிவாரத்தில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்திற்குச் சென்றாள். அவளுக்கு அனேக பச்சிலைகள், மூலிகைகள் முதலியன சிறு பிராயத்திலேயே பழக்கமாகத் தெரியுமாதலால் அந்த அவுடதத்திற்கு வேண்டியவற்றைத் தானாகச் சிறிதும் அங்குள்ள காட்டுவேடர், மலைக்குறவர் முதலியவர்களின் துணையால் சிலவற்றையும் கண்டு பிடித்து அந்த மருந்துகளைத் தயார் செய்யவேண்டிய ஏற்பாடு செய்துவிட்டாள்.

*  *  *  *

பன்னிரண்டு மாதங்கள் பறந்தோடிவிட்டன. இந்த அவுடதங்களைத் தயார் செய்யும் பொருட்டு பொன்னம்மாள் என்ன பாடு பட்டிருப்பாளோ! அது பகவானுக்கே அர்ப்பணம். அவைகளைச் செய்து முடித்தாள். அந்த மருந்துகளில் ஒன்று ஸ்திரீகளின் வயிற்றுக் கோளாறுகள், கர்ப்பாசயக் கோளாறுகள் முதலியவைகளை அறவே போக்கும் தன்மையில் முதன்மை ஸ்தானம் வகித்திருந்தது. ஆதலால் அந்த மருந்திற்கு "ஜெய ஸஞ்ஜீவி" என்ற பெயரையும் அடுத்தவற்றிற்கு அஜீரண வைரி, ரண நிவாரணி, ஜ்வர சம்ஹாரி என்ற நாமங்களைச் சூட்டினாள்.

தன் பாட்டனாரின் கடிதத்தில் கண்டபடி, யோகியாரின் உருவத்தை மானஸீகமாகச் சித்திரித்து அதற்குப் பூஜை முதலியன தினந்தோறும் தவறாமல் செய்து அம்மருந்துகள் வைத்துள்ள கோப்பைகளின்மேல் சாமியாரின் துணை என்றும் அவருடைய உருவப்படமும் பதிப்பித்து முதல் முதல் விற்பனைக்குத் தொடங்கினாள். எந்த வியாபாரமும் சடுதியில் லாபங் கொடுப்பதுண்டா! அப்படியே ஒரு வருட காலம் சரியானபடி விலை இல்லாமல் திண்டாடியது. இவ்விரண்டு வருஷ காலத்தையும் பொன்னம்மாள் மகா புத்திசாலியானபடியால் வீணாக்காமல் தன் பாட்டனார் பெட்டியிலிருந்த சில மருத்துவ புத்தகங்களை எல்லாம் தானும் படித்துத் தன் மகனையும் குருட்டுப்பாடமாகப் படிக்கச்செய்து அதிலிருந்து சில மருத்துவ முறைகளை இருவரும் நன்றாகத் தெரிந்துகொண்டார்கள்.

மருத்துவ மகாதேவன் என்ற ஒரு கிழவனிடம் தன் பையனை யனுப்பித் தாது பார்க்கும் முறைகளையும் பின்னும் சில விஷயங்களையும் தெரிந்துகொள்ளச் செய்தாள். நம் நாட்டு மருத்துவத்திலேயே பெரிய ஜெயம் பெறவேண்டும்

என்றும், அதைக் கண்டு அனேக வைத்தியர்கள் ஆச்சரியப் படவேண்டு மென்றும் பொன்னம்மாள் எண்ணினுள்: தாமோதரனின் அறிவு நாளைக்கு நாள் மிகத் தெளிவாயும் விரிவாயும் மலர்ந்துகொண்டே வந்ததால் தன் தாயார் தன் பால் காட்டும் சிரமத்தையும், அன்பின் மகிமையையும் நன்ருகத் தெரிந்துகொண்டு உலகில் தாயைப் பார்க்கிலும் தெய்வமே இல்லை: தாய்தான் தனக்கு முதன் தெய்வம். "அன்னேயும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பழமொழி பொய்யல்ல என்ற தீர்மானத்திற்கு வந்து அதையே அனுஷ்டிக்கவும் தொடங்கினுன்.

பொன்னம்மாளின் பெரும் முயற்சியினுல் தாமோதரன் அறிவு வளர்ந்ததுபோல அந்த அவுடதங்களும் பலன் கொடுக்க வாரம்பித்தன. ஊசி குத்தாமலும், கத்தி எடுக்காமலும், ஆயுத மில்லாமலும் பலவித ரோகங்களும் ஸ்வஸ்தமாகும் ஆச்சரியம் உலகம் முற்றும் வெகு விரைவில் பரவியது. இத்தனை அவுடதங்களில் ஜெய ஸஞ்ஜீவியும், ரண நிவாரணியும் தான் முதன்மை ஸ்தானம் வகித்துச் சிறந்து நின்றன. அனேக ஸ்திரீகள் இந்த ஜெய ஸஞ்ஜீவியை வாங்கி உபயோகித்துத் தம் வியாதி நீங்கப் பெற்று ஜெயத்தையடைந்து இவர்களை வாழ்த்தத் தலைப்பட்டார்கள்.

சில வருடத்திற் குள்ளாகவே இந்த வைத்திய சாலைக்கும் "ஜெய ஸஞ்ஜீவி அவுஷதாலயம்" என்ற பெயரே ஜனங்களால் நிர்மாணிக்கப்பட்டு நிலைத்துவிட்டது. ஆதலால் பொன்னம்மாள் ஜெய ஸஞ்ஜீவி அவுஷதாலயம் என்ற மகுடத்துடன் பலகை மாட்டிவிட்டாள். தாமோதரனும் அனுபவத்திலேயே ஓர் மருத்துவனுகி விட்டான்: பொன்னம்மாளின் சகாயம் பெரிதும் பயன் அளித்தது. சொந்தத்தில் கட்டிடமும் கடவுள் விரைவில் அளித்துவிட்டார்: தாமோ

தானும், பொன்னம்மாளும் இத்தகைய உயர்ந்த நிலைமை தமக்கு வந்தபோதிலும் தாம் குப்பை வாரக்கூடிய நிலைமை யிலும் இருந்த காலத்தை மறக்கவில்லை.

பெரிய ஷாப்புக்கள் போல இந்த அவுடதாலயம் பெருகிவிட்டது. தாமோதரன் ஷாப்பிற்கு வரும் ஜனங்களின் எண்ணிக்கை கூறத் திறமன்று. அவனுடைய புகழ் நாளுக்கு நாள் ஓங்கி வளர்கின்றது. இந்நிலைமையில் தாமோதரனுக்குக் குறைவுஉண்டா! நான், நீ என்று பெண்ணைக் கொடுக்கப் போட்டிகள் உண்டாயின. இந்த போட்டிகளில் பொன்னம்மாள் தன் மகனை ஏலத்தில் விடவில்லை. தாமோதரனும் தன் விவாக விஷயத்தில் ஆத்திரப் படவில்லை. ஆதலால் போட்டிக்காரர்களின் பாச்சா பலிக்கவில்லை. தான் வைத்தியத்தில் நன்கு நிபுணத்வம் அடைவதற்கும், வியாபாரம் நன்று செழிப்புற்று ஓங்குவதற்கும் வேண்டிய முயற்சியிலேயே இருந்தான்.

இந்நிலைமையில் இருக்கையில் முன்பு இவனுடன் சினேகமா யிருந்தவர்கள் தண்டனை யடைந்ததாக நாம் கூறியது நினைவிருக்கலாம். அவர்கள் எல்லோரும் விடுதலை யடைந்து வந்து சேர்ந்தார்கள். "பாம்பினுடைய விஷம் பல்லை விட்டுப் போகுமா?" என்பதுபோல பாம்புக் கொப்பாகிய அவர்கள் விடுதலை யடைந்து வெளி யுலகத்திற்கு வந்ததும் தங்கள் பழைய சினேகிதர்களைப் பற்றி விசாரிக்கையில் தாமோதரனின் உன்னதமான ஸ்திதியையும், அபார புகழையும் கேள்வியுற்றுப் பொறாமை வடிவமாக பிரமித்தார்கள். "இத்தகைய அதிர்ஷ்டம் இவனுக்கு எப்படி வந்தது. எவ்விதம் இவன் பெரிய நாட்டு வைத்தியனுயும்? மருந்து ஷாப்புக்குச் சொந்தக்காரனுயும் ஆய்விட்டான், நம்மை யறியாது எங்கேனும் கொள்ளைதான் அடித்

திருக்கவேண்டும்: இல்லாவிடின் இத்தனை வருடத்திற்குள் எவ்விதம் இந்த பதவியை அடையக்கூடும்?'' என்று பெரும் குழப்பங்கொண்டு அதையே கவனிக்கத் தொடங்கினார்கள்.

தாமோதரனிடம் சிநேகம் செய்ய மீண்டும் எத்தனிக்க வேண்டுமென்று சூழ்ச்சி செய்து அவனிடம் ஒரு தினம் சென்றார்கள். பரம அயோக்யர்களாகிய அவர்களைக் கண்டதுமே தாமோதரன் நடுங்கினான்; வெறுப்பு கொண்டான்; சற்றும் தாக்ஷண்யமின்றி "உங்களை யார் இங்கு வரச் சொல்லியது? நீங்கள் உடனே இவ்விடத்தை விட்டு எழுந்து போய் விடுங்கள்; உங்கள் சகவாஸம் வேண்டாம்.'' என்று கண்டிப்பாய்க் கூறினான்.

வந்த சோதாக்கள் இதைக் கேட்டதும் குறும்பாக நகைத்துக்கொண்டே, "ஓகோ! கோபந்தான் வரும்: வராதா பாவம்! இந்த பதவிக்கு வருவதற்குத் தாங்கள் எங்கே கொள்ளை யடித்தீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாத பரம ரகஸிய மென்று எண்ணவேண்டாம்: எங்களுக்குத் தெரிந்துவிட்டது எஜமானே!'' என்றார்கள்.

தாமோ:—சேச்சே! பேமானிகளே! மானங் கெட்டு சிறைக்குச் சென்று திரும்பிய பின் இன்னும் கொழுப்பு அதிகரித்து விட்டது போலிருக்கிறது; உளறுதீர்கள். நல்ல தனமாக எழுந்து போகிறீர்களா, அல்லது உங்களைத் தள்ளும் வகையில் தள்ளட்டுமா? என்று கூறியவாறு டெலிபோனிடம் சென்று பேசத் தொடங்கி "போலீஸ் ஸ்டேஷனா!'' என்று கேட்டான். உடனே அத்தனை பெயர்களும் "அடேய் தாமோதரா! உன் அகந்தையை, உன் வாழ்நாளின் திமிரை நாங்களறியாமல் விடப் போவதில்லை: ஜாக்ரதை! கூடிய சீக்கிரமே உன் கதியை நீ அறியச் செய்கிறோம்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்கள்.

இந்த வார்த்தைகளைப் பொன்னம்மாளும் கேட்டுக் கொண்டே வந்தாள். "அப்பா! இதற்காக பயப்படாதே; ஆதியில் நீ செய்த லீலையின் பயன் இது. இதனால் நமக்கு யாதொரு அழிவுமில்லை. கடவுள் மீது பாரத்தைச் செலுத்தி நீ பொதுவாய் நட. கடவுள் நன்மை தீமைகளைத் தானே பார்த்துக்கொள்கிறான்'' என்று தேறுதல் கூறினாள். என்ன தேறுதல் கூறியும் தாமோதரனுக்கு உள்ளூர குலை நடுக்கலும் ஒரு விதமான பயமும் ஏற்பட்டு அதே கிலி கொண்டதுபோல வருத்தத் தொடங்கியது. "ஐயோ! கொலைக்கும் அஞ்சாத துஷ்டர்களாயிற்றே! என்ன செய்து விடுவார்களோ''! என்று எண்ணிப் பதுமை போலானான்.

---

## 3-வது அதிகாரம்.

## பொறாமை தேவதைகள் புரியும் ஆட்சி

சிந்தாமணி நல்ல அழகிய நங்கை! காண்போர் மனத்தைக் காந்தம்போல் இழுக்கும் சக்தி வாய்ந்த வனிதாமணியாய் விளங்கினாள். ஜெய ஸஞ்ஜீவி வைத்தியசாலையில் அவள் ஓர் ஏஜண்டாக நியமிக்கப்பட்டிருந்தாள். அவள் வாரம் ஒரு முறை அந்த கம்பெனிக்கு வருவதும், அங்கு மருந்துகளை வாங்கிக் கொள்வதும் வாங்கிய மருந்திற்குப் பணத்தை ஒப்புவித்து கணக்கைத் தீர்ப்பதுமாக விருந்தாள்! வாரம் ஒரு முறைக்குள் கொண்டுபோன மருந்துகள் செலவாகிவிட்டால் மத்தி

யில் வந்து எடுத்துச் செல்வாள். பொன்னம்மாளுக்கு இந்த பெண்மணியைக் கண்டால் நிரம்பவும் பிடித்தமாயிருந்தது. ஆதலால் அவளுக்குச் சரியான சம்பளமும், சுற்றுவதற்கான தனிச் செலவும் கொடுத்து வந்தாள்.

கடையில் விற்பனை செய்வதற்கு ஸ்திரீகளுக்கென்றே ப்ரத்தியேக இடம் வைத்து ஸ்திரீகளே அந்த வேலையைக் கவனிக்க வேண்டுமென்று ஒரு யோசனை தோன்றியதால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து பத்திரிகையில் பெண்கள் தேவை என்ற விளம்பரமும் செய்தார்கள். அந்த டிபார்ட்டுமெண்டிற்கு சிந்தாமணியையே மானேஜராக நியமித்தார்கள்; மொத்தம் 5 பெண்களே தமக்குத் தேவை என்று விளம்பரம் செய்திருந்தார்கள். மனுக்கள் கணக்கின்றி குவிந்துகொண்டே இருக்கின்றன.

முன்னர் தாமோதரன் மீது கறம் வைத்துக் கோபமாகப் பேசிச் சென்ற தாண்டவராயன் கூட்டத்தினர்கள் தாமோதரனைப் பற்றி விசாரித்ததில் ஜெய ஸஞ்ஜீவி முதலிய அவுடதங்கள் தயாரிக்கும் முறைகளடங்கிய காகிதம் எப்படியோ கிடைத்துவிட்டதாயும், அதை அவன் தாயாருங்கூட உடந்தையாக விருந்து திருடிவிட்டாள் என்றும் அதனல் தான் இத்தனை உயர்ந்த பதவிக்கு வந்துவிட்டான் என்றும் விஷயம் அரைகுறையாய்த் தெரிந்து கொண்டார்கள்: அது முதல் எவ்விதமாவது முயற்சி செய்து அவனிடமிருந்து அந்த முறைகளைத் தாங்கள் அபகரித்துத் தாங்களும் இவ்விதம் செய்ய வேண்டுமென்ற துர்ப்புத்தி யுண்டாகிவிட்டது. அதனல் அதைப் பற்றியே சதி யாலோசனை செய்து கொண்டிருந்தார்கள்:

வெறும் வாயை மெல்லும் அவ்வைக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததுபோல இந்தக் கூட்டத்தினருக்கு தாமோ

தரன் செய்திருந்த விளம்பரம் வெகு ஆதாரமாகக்கிடைத்து விட்டது. அந்த விளம்பரத்தைக் கண்டதும் பெரு மகிழ்ச்சி கொண்டு அன்றிரவே ஓர் கூட்டங் கூட்ட ஏற்பாடு செய்து இரவு 10 மணிக்குக் குறிப்பிட்ட இடத்தில் கூட்டத்தை யுங் கூட்டி விட்டார்கள். அக் கூட்டத்தின் தலைவனுகிய தாண்டவராயன் எழுந்து "நண்பர்களே! இக் கூட்டம் எதற் காகக் கூட்டி இருக்கிறேம் என்பது உங்கள் எல்லோருக் கும் தெரிந்த விஷயம். நம்முடனேயே சினேகமாக இருந்து, பல ஆண்டுகள் தின்று,கொழுத்துப் பின் நம்மை விரோதித் துக் கொண்டு சென்றது மல்லாமல் நம்மை விலக்கி விட்டு அவன் நம்மிடம் கற்ற கொள்ளை யடிக்கும் வித்தையை உபயோகித்து ஜெயஸஞ்ஜீவி செய்யும் முறைக் காகிதத்தைக் கொள்ளை யடித்துக் கொண்டு வந்து அதனுல் பெரிய மனி தனுக விளங்கும் தாமோதரன் பணத்திமிரால் தான் முன்பு செய்து வந்த ஊழலையும்—நம் சினேகத்தையும்—மறந்து அன்று எவ்வளவு உதாசீனமாகப் பேசினுன் என்பது நீங்க ளறிவீர்கள். அந்தப் பயலைத் தலை எடுக்க வொட்டாமல் நாம் செய்துவிட வேண்டுவதுதான் நாம் அவனுக்குச் செய்யும் ப்ரதி யாகும். இதற்கு இதோ இந்த விளம்பரமே நல்ல துணை யாயிற்று.

நேயர்களே! இப்போது நாம் என்ன செய்ய வேண்டு மென்றுல் நமது ஆசைக் கிழத்தி இந்திராணியை நாம் மறைமுகமாக நிறுத்தி இதற்கு ஓர் மனு போடச் செய்து எப்படியாவது அந்த ஜெய ஸஞ்ஜீவி வைத்திய சாலையில் வேலைக்கு அமர்த்திவிட வேண்டும். இந்திராணியைப் போன்ற கெட்டிக்காரியை இனி உலகில் இவளைப் படைத்த கடவுளாலேயே சிருஷ்டிக்க முடியாது என்பது நிச்சயம்.



(சபையில் கை கொட்டலும், ஆரவாரமும் பலக்கிறது)
இவள் தற்காலத்திற்கேற்ப ஆங்கிலமும் படித்திருக்கிறாள்; நல்ல யூக சக்தி யுடையவள்; ஆகையினால் இக் காரியத் திற்கு இவளே சரியான ராணியாவாள். இப்போது தாமோ தரன் இருக்கும் நிலைமைக்கு நாமும் வந்து விடலாம்; பிறகு போலீஸாரிடம் அகப்பட்டுச் சாகும் விதியை வென்று விடலாம்.

இந்திராணீ! விஷயந் தெரிந்தா! அங்கு உனக்குக் கட்டாயம் வேலை கிடைக்கும்படிக்குச் செய்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு உன் ஜால வித்தை முற்றும் காட்டி, நீ பெரிய குடும்பத்துப் பெண் போல நடித்து,

தாமோதரனைக் கண்டு காதல் கொண்டவைதல்போல அபி நயித்து, அவனை உன் வலையில் போட்டுச் சிக்க வைத்த பின்னர் அவனிடத்திலிருந்து அந்த ப்ளானை எப்படியாவது அபகரித்துக் கொண்டு வரவேண்டும். அந்த முறைகள் அவனிடமாவது அவன் தாயாரிடமாவது தான் சதா இருக்கின்றனவென்று கேள்வி. அந்த கடிதத்தை எப்படியாவது கண்டு பிடித்து அடித்துக் கொண்டு வந்துவிட வேண்டும் அப்படி அதைக் கொண்டு வந்து விட்டால் அந்த முறையைக் கொண்டு நாம் தயார் செய்து அந்த கம்பெனியையே இந்திராணியின் பேரில் ரிஜிஸ்டர் செய்து விடலாம். (கரகோஷம்) என்ன சொல்கிறாய்! கண்ணுட்டீ?" என்று மழை பெய்து ஓய்ந்ததுபோலக் கூறினான்.

அடுத்த நிமிடமே "அண்ணாத்தே! நீ சொல்றதுதான் சரி! இதை நாங்கள் எல்லோரும் ஆமோதிக்கிறோம். அந்த தாமோதரனைச் சரியானபடி மட்டந்தட்ட வேண்டும். இல்லாவிட்டால் நம்மைச் செய்த அவமானத்திற்குத் தக்க சிக்ஷை செய்ததாகாது." என்று மற்றவர்கள் ஆரவாரித்தார்கள். இந்திராணி எழுந்து நின்று "என்னுடைய நேசர்களே! இக் காரியத்தை நான் செய்வது ஒரு பெரியதேயல்ல. இதை ஒரு நொடியில் செய்து விடுகிறேன்; எனக்கு அந்த சாமர்த்தியங்கூட இல்லையா! இதைப் பற்றிக் கவலையே வேண்டாம். முதலில் இதற்கு ஓர் காரியம் செய்ய வேண்டும். அதாவது எனக்குச் சொந்தமாக சில வைர நகைகளும் உயர்ந்த ஆடைகளும் முதலில் வாங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் என்னைப் பார்க்கும்போதே ஓர் பெரிய சீமாட்டியின் மகள்—செல்வச் சீமாட்டியைப் போல, இளைய ஜெமீந்தாரிணியைப் போல—இருக்க வேண்டும். அப்போதுதான் என்னை அவர்கள் முற்றிலும் சந்தேகமே இன்றி நம்பக்

கூடும். இல்லையேல் அல்ப மனுஷி என்று எண்ணி விட்டால் பெரிய மோசமாகி விடும்.

மேலும் நான் வேலைக்குப் போவது என்னுடைய தொழிலுக்கு என்று நான் கூறப் போவதில்லை. "என்னுடைய பொழுது போக்கிற்காகவும், தமாஷுக்காகவும் நமது சகோதரிகளுக்கு தேக ஆரோக்கியத்தை யுண்டாக்க உதவி செய்யவும் தான் இங்கு வந்தேன்" என்று கூறப் போகிறேன். அதற்குத் தகுந்த அந்தஸ்திலிருக்க வேண்டு மல்லவா! ஆதலால் நாளையே இந்த ஏற்பாட்டைச் செய்யுங்கள்; மனுவும் எழுதிப் போட்டு விடுவதோடு நானே நேரிலும் பார்த்து விட்டு வருகிறேன்." என்றாள்.

இந்த ரஸமான யோசனையை எல்லோரும் அங்கீகாரம் செய்தார்கள். இன்னும் அனேக தீர்மானங்கள் நிறைவேறின. அதன் பிறகு மதுபானம் வழங்கப் பட்டது; கூட்டமும் கலைந்தது. மீண்டும் தாண்டவராயன் இந்திராணியைத் தட்டிக் கொடுத்து "கண்ணே! ஜாக்ரதை. அந்தப் பயலை ஒரு அறை விட்டு நான் இதைக் கைப்பற்றி விடுவேன்; ஒரு கால் அது எக்கச் சக்கமாகிப் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தால் கஷ்டமாக முடியுமே! அதற்காகத்தான் நாமும் அகப்பட்டுக் கொள்ளாது, காரியமும் ஒழுங்காக முடிய வேண்டிய வழியைத் தேட வேண்டும்; அதற்காகவே இவ்வித யோசனையைச் செய்துள்ளேன்; இதில் வெற்றியைக் காட்டி விட்டால் நீதான் இந்தப் பட்டத்து இந்திராணியாகி விடுவாய்" என்றான்.

விஷம் தலைக்கேற வாரம்பித்து விட்டால் எவ்வளவு வேகமாக ஏறுமோ அதே போல் விஷம புத்தி யுடையவர்களின் செய்கையும் பரபரப்பாக நடை பெறத் தொடங்கியது. மறு தினமே இந்திராணியின் அப்ளிகேஷன் ஒரு பாபமு

மறியாத தாமோதரனுக்குக் கிடைத்தது. அன்று மாலையி லேயே நவீன நாகரிகமான அலங்காரத்துடன் இந்திராணி ஜில், ஜில் என்று ஜெய ஸஞ்ஜீவி வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தாள். அப்போதே வெளியில் புதிதாக வந்த பெரிய குடும்பத்துப் பெண்ணைப் போன்றும், நாணத்தில் மிகுந்த நாரீமணி போன்றும் பெருத்த நாட்டியத்துடன் வந்து தன் பெயர் அடித்த சீட்டைத் தாமோதரனின் முன்பு நீட்டினாள்.

இதை வாங்கிப் பார்த்த தாமோதரன் கபடமற்ற பார்வையுடன் "அம்மா! வாருங்கள்; இந்த ஆசனத்தில் அமருங்கள்." என்று கூறி "அம்மா! அம்மா! இதோ யாரோ வந்திருக்கிறார்கள் பாருங்கள்" என்று தன் தாயாரைக் கூப் பிட்டான். பொன்னம்மாளும் வந்தாள். இந்திராணியி னுடைய தடபுடல் அலங்காரங்களையும், சீமைக் கமலத்தின் ஜொலிப்பையும் கண்டு பொன்னம்மாள் வியப்புற்று மயங்கி விட்டாள். "அம்மா! இந்த கடித மனுப்பியது நீதானா! நீ எங்கே இருப்பது? இதற்கு முன் எங்கேனும் வேலை பார்த் திருக்கிறாயா!" என்று கேட்டாள்.

இந்திராணி:—அம்மா! நான்தான் இதை யனுப்பிய வள்! எனக்கு எங்கேனும் வேலை செய்துப் பிழைக்க வேண் டிய நிலைமையே கிடையாது. எங்களுக்குப் பரம்பரையாக வேண்டிய சொத்திருக்கிறது. நான் என் வீட்டிற்கு ஒரே செல்வப் புதல்வியாக விளங்குகிறேன். எனக்கு ஏராளமான பணச் செலவிட்டுப் பாட்டு, படிப்பு முதலியன சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்; அதோடு எனக்கு அருமைக்கருமை யாய் விளங்கிய பிதா இறந்துவிட்டார்; இரண்டு மாதங்களா கின்றன. வீட்டிலிருந்தால் அந்த விசனம் தாங்கமுடிய வில்லை. அதனால் இப்படி எங்காவது வேலை பார்த்துக் கொண்டு பொழுதைக் கழிக்கலாம் என்று தோன்றியது.

மேலும் இது நல்ல கவுரமான கம்பெனி என்றும் கேள்விப் பட்டேன்! எனக்கு சம்பளத்தைப் பற்றி அவசியமில்லை. நான் கவுரவமாகவே வேலை செய்து பொழுது போக்கத் தயாராகவிருக்கிறேன். நல்ல சகவாசந்தான் எனக்கு முக் கியம். எனக்குப் பணம் ப்ரதானமில்லை.'' என்று வெகு ஒழுங்காகக் கயிறு திரித்தாள்.

இதைக் கேட்ட பொன்னம்மாளுக்கு வெகு நம்பிக் கையும், அந்த கபடியினிடத்தில் மதிப்பும் உண்டாகிவிட் டன. அவளுடைய நடிப்போ உலகிலேயே அவளைப் போன்ற கற்பிற்கரசியே இல்லை என்று கூறும்படியாக இருந்தது. அழகும் அதற்குப் போட்டி போட்டது. ஆடம்பரமும் மேல் வகைகளுக்குச் சகாயம் செய்ததால் முன் பின் சற்றும் யோசிக்காமல் அவளுக்கு வேலை கொடுப் பதாக வாக்குக் கொடுத்து அதற்கான காரியங்களைச் செய்துவிட்டு,நாளை முதல் வேலைக்கு வரும்படியும் கூறிவிட் டாள். தாமோதரனும் அதற்கு இசைந்தான்.

வந்த வேலை த்ருப்திகரமாக முதல் நாளே முடிந்து விட்டதனால் அளப்பரிய சந்தோஷத்துடன் இந்திராணி வீட்டிற்கு வந்தாள். அவளது வரவை எதிர் நோக்கி நின்ற தாண்டவராயனும் அவனது கூட்டத்தினரும் ஆவலோடு அவளை வரவேற்று, விஷயம் ஜெயம் என்றதை யறிந்ததும் அளவிலா ஆநந்தமடைந்து அவளுக்குக் கைலாக்கு கொடுத்து அன்று பெரிய விருந்து நடத்திவிட்டார்கள். அப்போதே கைக்கு அந்த ப்ளான் கிட்டிவிட்டதாக மெத்த மனம் பூரித்தார்கள்.

மறு நாள் முதல் வெகு அடக்க ஒடுக்கமாகஇந்திராணி வேலைக்குச் செல்ல வாரம்பித்தாள். அவளுக்கு என்ன வேலை யுண்டோ அதை வெகு ஒழுங்காகச் செய்வதும்,தலை

நிமிராது குனிந்தபடியே இருப்பதுமாய் எல்லோரையும் ப்ரமிக்கச் செய்ததுடன் சில தினங்களுக்குள்ளேயே தன்னை நன்ருக நம்பும்படிச் செய்துவிட்டாள்.

சிந்தாமணியே அந்த டிபார்ட்டுமெண்டைக் கவனித்து வந்தாள். அங்கு 5 பெண்கள் வேலைக்கு அமர்ந்தார்கள். சிந்தாமணி அந்த கம்பெனி ஆரம்ப முதல் வேலை செய்வதால் அவளுக்குக் கம்பெனி விஷயங்கள் சகலமும் நன்ருகத் தெரியும்; ஆதலால் மானேஜர் வேலை பார்ப்பதற்கு வெகு சுலபமாக முடிந்தது. அவள் அங்கு வேலைக்கு வந்த நாள் முதலாக மிக்க ஒழுங்காயும் வித்யாசமற்ற அன்புடனும், தன்னை யறியாத ஓர் பற்றுதலுடனும் வேலை செய்து வருகிருள். நாளடைவில் அவளுக்கு இயற்கையான பருவத்திற்கேற்ப வனப்பும், வசீகரமான தேஜஸும், பளபளத்த மேனியும், முக காம்பீரமும் ஒன்றுகூடி அபாரமான எழிலுடன் விளங்கினுள். ஆனுல் அத்தனை தேஜஸிலும் அவள் முகத்தில் சதா விசனமான களையே நிறைந்து விளங்கியது. இதற்குக் காரணம் அவ்வனிதையின் மனமறியுமே யன்றி பிறரறிய முடியவில்லை.

25 வயது வாலிபனுகிய தாமோதரனை மட்டும் இயற்கை யன்னையின் பருவ விளையாட்டு விட்டதா! விடவில்லை. அவனுடைய தோற்றம் அசல் மன்மதனைப்போல் தோன்றியது. தனலக்ஷ்மியும், ஜெயலக்ஷ்மியும் அவனிடம் பூர்ண கடாக்ஷம் செய்யத் தொடங்கிய பிறகு தனித்த ஜோதிக்குக் கேட்கவேண்டுமா! வயதிற்கேற்ற அறிவு; அதற்கேற்ற அனுபவம்; அதற்கிசைந்த ஒடுக்கம். அதற்குத் துணையான நன்னடத்தை, வாக்கு நாணயம், மரியாதை, பணிவு, முதலிய பல குணங்களும் ஒன்று கூடி அவனை வெகு மேன்மையாக விளங்கச் செய்தன.

இந்திராணியோ தன்னுடைய காரியத்தில் ஜெயமடையும் பொருட்டு தாமோதரனைக் காணும்போதெல்லாம் குலுக்கிப் பிலுக்கி கடைக்கண்ணால் பார்த்து தன் வலையை வீசும் சாகஸங்களைச் செய்வாள்! தாமோதரன் இந்த பெண்ணிடம் அதிக நேரம் நிற்கக்கூடமாட்டான். காரியத்தைக் கவனித்துக்கொண்டு போய்விடுவான். இந்திராணி தின்பண்டங்கள், பழங்கள் இவைகளை வாங்கி வந்து தாமோதரனுக்குக் கொடுப்பான்! தாமோதரன் அவளுடைய கருத்தையறியமாட்டானாகையினால் அவைகளில் ஒன்றிரண்டு மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதைத் திருப்பிவிடுவான்.

சிந்தாமணி மட்டும் இந்திராணி செய்யும் ஜால லீலைகளை எல்லாம் வெகு கவனமாகக் கவனித்து வந்தாள். அதோடு இந்திராணியைக் கண்டாலே அவளையறியாத சந்தேகம் உண்டாகியது. அதனால் இந்திராணியைப்பற்றிக் கவனித்துக்கொண்டே வரத் தொடங்கினாள். இந்த ரகஸியத்தை தாமோதரனாவது, இந்திராணியாவது அறியமாட்டார்கள்; தான் எதிலும் பட்டுக்கொள்ளாதவள் போலவே இருந்து முக்கியமாக அதைக் கவனிக்கலானாள். தாமோதரனை எவ்விதமாவது குடிப்பதற்குப் பழக்கிவிட வேண்டும் என்ற தீர்மானத்தை இந்திராணியின் கூட்டத்தார் கொண்டுள்ளதால் அதற்குப் பிரயத்தனம் செய்யத் தொடங்கினாள். இந்த சூக்ஷ்மத்தையும் சிந்தாமணி தெரிந்து கொண்டு அவ்வழியில் மிக்க ஜாக்ரதையாக வேலை செய்யவாரம்பித்தாள்.

இந்திராணி மோட்டார் வைத்துக்கொண்டு தானே ஓட்டவாரம்பித்தாள்! தாமோதரனிடத்தில் வெகு ப்ரியமாகப் பழகிப் பேசுவதும், அவனையும் டிப்பன் சாப்பிட ஓட்டலுக்கு அழைப்பதுமாக ஆரம்பித்தாள். தினம் தினம் இவ்

விதம் அழைத்தும் எத்தனை நாளைக்குத் தடுப்பது? பொன் னம்மாளுக்கும் அவளைப்பற்றி நல்ல அபிப்ராய மிருப்பதால் அவளும் அதைத் தடுக்காதிருந்து விட்டாள். தாமோதரன் வெகுவாய் நம்பிவிட்டதால் அவளுடன் மிக்க தாராள மாகப் பேசிப் பழக வாரம்பித்ததோடு அவளுடன் டிப்பன் சாப்பிடவும் தலைப்பட்டான். மோட்டாரில் அவனை யழைத் துச் சென்று உயர்தரமான குடி வகைகளைக் கொணர்ந்து வைத்துப் பார்த்தாள். அதற்கு மட்டும் தாமோதரன் இணங்கவில்லை. அவனுக்கு குடிப் பழக்கம் அடியோடு கிடையாதாகையினால் அதை அறவே மறுத்துவிட்டான்.

இந்திராணியுடன் தாமோதரன் காரில் செல்கையில் தன்னுடைய மனத்தின் ஆசையை வெகு அன்பாகக் கூற வும் தொடங்கினாள். இந்திராணி தன் வீட்டில் டீ பார்ட்டி வைத்து அதற்கு தாமோதரனை அழைத்திருந்தாள்! அழைப்புப் பத்திரம் தாமோதரன் கைக்கு எட்டியதும், அதே நேரத்தில் அவன் மேஜைமேல் கீழ் வரும் துண்டுக் கடிதமும் இருந்தது.

"தாமோதரா! ஏமாந்து போகாதே! உஷார்! டீ பார்ட்டி என்பது உண்மையல்ல! உன்னை மோசம் செய்யும் பொருட்டே நடப்பதாகும். ஜாக்ரதை! இந்த உண்மையைப் பிறகு நீயே காணக்கூடும்."

என்று மொட்டையாக எழுதி இருந்ததைக் கண் டான். இவனுக்கு ஆச்சரியம் கூறத் திறமற்று விட்டது. "இதென்ன இது? இந்திராணியோ சாமானியப் பெண் ணல்ல; பெரிய குடும்பத்துச் சீமாட்டி! அவள் எதற்காக என்னை மோசம் செய்ய வேண்டும்? அவள் என்னிடம் காட் டும் ப்ரியமெல்லாம் என்னை நேசிப்பதாக வன்றோ தெரிகி றது. அப்படி இருக்க என்னையே மோசம் செய்யக் காரணம்

என்ன இருக்கிறது? இதென்ன வேடிக்கை!'' என்று வெகு நேரம் சிந்தித்தான்; அவனுக்கு ஒன்றுமே விளங்க வில்லை.

பொன்னம்மாளுக்கும் இந்த அழைப்புப் பத்திரம் வந்திருந்ததால் அவளும் மரியாதையோடு போக வேண்டுமென்று தாமோதரனுடன் கூறிப் பிரயாணத்திற்கும் சித்தமாகி விட்டாள். தாமோதரன் 'இந்த மொட்டைக் கடிதத்தைப் பற்றித் தன் தாயாரிடம் சொல்லலாமா, வேண்டாமா!' என்று எண்ணிக் குழப்ப மடைந்தான். பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் எதுவாயினும் தன் தாயாரிடம் காட்டி விடுவதுதான் மேல் என்று தீர்மானித்துப் பின் கடிதத்தைக் காட்டினான். இதைக் கண்ட பொன்னம்மாள் அபாரமான வியப்பு கொண்டு "இதென்ன கடிதம்! மொட்டையாக விருக்கிறதே! யார் கொடுத்தார்கள்! எப்படி வந்தது?'' என்று கேட்டுப் பிரமித்துப் போய் விட்டாள்.

தாண்டவராயன் கூட்டத்தினர்கள் பெரு முயற்சியுடன் டீ பார்டிக்குத் தயார்;செய்து, தம்மை யன்றி புதிய ஆட்களையும் ஸ்திரீகளையும் சேகரித்து ஊருக்கு வெளியில் பெரிய இந்திர பவனம் போன்ற பங்களாவை எடுத்து அலங்கரித்துத் தடபுடல் செய்திருக்கிறார்கள். "இந்திராணீ இருவருக்கும் அழைப்புப் பத்திர மனுப்பினாயா?'' என்றான் தாண்டவராயன்.

இந்திரா:—இன்னும் பத்திர மனுப்பாமலா! இதோ சற்று நேரத்திற்கெல்லாம் மோட்டார் அனுப்பப் போகிறேன்; தாயும், பிள்ளையும் சேர்ந்து வந்து விடுவார்கள்; பிறகு பார்டி நடத்தலாம்.—என்றாள்.

தாமோதரனும், பொன்னம்மாளும் அந்த துண்டுக் கடிதத்தைப் பற்றி ஒன்றும் தோன்றாது யோசித்தார்கள்; எனினும் அதைப் பற்றி அவர்கள் நம்பவில்லை. "இதை யாரோ

வேண்டுமென்று செய்திருக்க வேண்டும். தாமோதரா! இதைப் பார்க்கையில் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா! இந்திராணி நல்ல செல்வச் சீமாட்டியாயும், அழகாயும் இருக்கிறாள்; அதோடு நல்ல புத்திசாலி. அவளை எங்கே உனக்கு விவாகம் செய்துவிடப் போகிறார்களோ! என்கிற பயம் அவர்களைச் சேர்ந்த எந்த மனிதர்களுக்காவது இருக்கலாம். பொறாமையினால் அவர்கள் இப்படிச் செய்து அதைக் கலைக்க முயன்றிருக்கலாம். இதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லையே! உனக்கு என்ன தோன்றுகிறது?'' என்றாள்.

"எனக்கா! நீ சொல்கிறபடிதான் இருக்கலாம். உண்மையில் நான் பழகிய வரையில் அவள் என்னை முழு மனத்துடன் நேசிக்கிறாள் என்பதை நான் தெரிந்து கொண்டேன்! அவளுக்கு என்னை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் பரிபூர்ணமாக விருக்கிறது. ஆனால்...

பொன்ன:—என்ன ஆனால்? ஆனால் உனக்குப் பிடிக்கவில்லையா! அதுதானே சொல்லப் போகிறாய்! அதைப் பற்றி இப்போது விசாரமென்ன! வீதியில் ஏதோ மோட்டார் வந்த சப்தம் கேட்கிறதே பாரு—என்றாள்.

உடனே ஒரு ஆள் வந்து "இந்திராணியம்மாள் வீட்டிலிருந்து கார் வந்திருக்கிறது. அவர்களுக்கு வருவதற்கு ஓய்வு இல்லையாம்; உங்களிரண்டு பேர்களையும் அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்கள்'' என்று கூறினான். இந்த மொட்டைக் கடிதத்தைக் கவனிக்காமல் இருவரும் புறப்பட்டு வண்டியில் ஏறி விட்டார்கள். வண்டியும் வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

தாமோ:—ட்ரைவர்! அந்த பங்களா எங்கிருக்கிறது? வெகு தூரமா!

ட்ரைவர்:—இல்லீங்க; கிட்டதானுங்க இருக்குது. நம்ப ஊட்டுக்கும் பங்களாவுக்கும் 10 மெயிலுதாங்க. ஜாஸ்தி இல்லீங்க.—என்று பேசிக் கொண்டே செல்கையில் எதிரே ஒரு மோட்டார் வெகு வேகமாக தலைத்தெறிக்கவந்தது. இவ் வண்டியின் சமீபத்தில் வருகையில் அந்த மோட்டார் நின்று விட்டது. வண்டியிலிருந்த ட்ரைவர் ஒரு குதி குதித்து இறங்கி "அடேய்! வண்டியை நிறுத்து. உம்; நகருகிறாயா!" என்று கூறிக்கொண்டே துப்பாக்கியைக் காட்டினான். இந்த

எதிர்பாராத சம்பவத்தைக் கண்டு நடு நடுங்கிய ட்ரைவரின் கை கால்கள் வெல வெலத்துப் போய் அப்படியே சாய்ந்து விட்டான். பொன்னம்மாள், தாமோதரன் ஆகியவர்களின் நிலைமையைக் கூற வேண்டுமா! கதி கலங்கி நிலை தடுமாறி ஸ்தம்பித்து "ஹா!" என்று வாய்விட்டு அலறிவிட்டார்கள்.

அப்போது மாலை 5 மணி சுமாரிருக்கும் காலம் ஐப்பிசி மாதமாகையினால் 5 மணிக்கு சூரியன் அஸ்தமனமாகும் தருணமாகி விட்டது. சாலையின் இரண்டு புறமும் சவுக்கு மரங்கள் அடர்ந்திருந்தமையினால் இருள் சூழ்ந்தவாறே இருந்தது. பக்ஷி இனங்களின் ஆரவாரங்களைத் தவிர வேறு சந்தடியே இல்லை. இத்தகைய நிர்மானுஷ்யமான காட்டு வழியில்தான் மேற் கூறியபடி சம்பவம் நிகழ்ந்தது. கதி கலங்கிய தாயும் மகனும் மருண்டிருந்த சமயம் இரண்டு முரட்டு ஆட்கள் வந்து இவர்களை மிரட்டியவாறு துப்பாக்கியைக் காட்டி "பதில் பேசாமல் சகலத்தையும் ஆடையுள்பட கழட்டி வைக்கிறீர்களா! சுட்டு விடட்டுமா! உம்; பதில் பேசினால் செத்தீர்கள்." என்றார்கள்.

என்ன செய்வார்கள் பாவம்! திருகத் திருக விழிக்கிறார்கள். உயிருக்கு மிஞ்சி யாதுமில்லை யாதலால் சகலத்தையும் கழற்றி வைத்தார்கள். வந்த முரடர்கள் எல்லாவற்றையும் பார்த்து விட்டு, "அடேய் திருட்டுப் பயலே! ஓகோ! எங்களிடமா இந்த ஜால வித்தை! "ஜெய ஸஞ்சீவி" செய்யும் முறைக் காகித மெங்கே! அதற்காகத்தான் நாங்கள் உன்னைத் தேடி யலைவது? இந்த வைரமெல்லாங் கிடக்கட்டும்; உம். அதை எடுத்து வை! எங்கே வைத்திருக்கிறாய்! சொல்லு" என்று அதட்டி மீண்டும் துப்பாக்கியைக் காட்டினார்கள். இனி என்ன செய்ய முடியும்? பொன்னம்மாள் அந்த முறையை ஓர் சிறிய பையில் போட்டுத் தன் தலையில்

வைத்து முடிபோட்டுக் கொண்டிருந்தாள்! "அதை எப்படி இவர்கள் கண்டு கொள்ளப் போகிறார்கள்?" என்று எண்ணி, "ஐயா! அந்த அல்ப விஷயத்திற்கா எங்களை இவ்விதம் செய்கிறீர்கள்? எங்களுக்கு அந்த முறை வாயிலேயே பாடமேயல்லாது ப்ரத்யேக ப்ளான் ஒன்றுமில்லை. வேண்டுமாயின் சொல்லுகிறேன்" என்று சற்று தைரியமாகக் கூறினாள்.

இதற்குள் அந்த முரடரில் ஒருவன் "ஓகோ! எங்களை ஏய்ப்பதற்கு இது ஒரு முறையோ! அதெல்லாம் முடியாது. நீ கொள்ளை யடித்த விஷயத்தை நாங்களறிவோம். அதைக் கூட நீ உயிருடன் சொல்ல மாட்டாயா! இந்த கதைக்கெல்லாம் நானு கட்டுப் படுகிறவன். உம்; அதை வைக்கிறாயா, இல்லையா!" என்று கேட்டபடியே சற்றும் அச்சமின்றி பொன்னம்மாளைத் தீண்டி, கையைப் பிடித்து இழுத்து, மற்றொரு கையினால் தலையில் கையைக் கொடுத்து மோட்டாரிலிருந்து கீழே தள்ளினான்.

அப்போது தலையில் வைத்திருந்த அந்தப் பையுடன் தலையவிழ்ந்து, அது பொத்தெனக் கீழே விழுந்தது. அதைக் கண்டதும் "ஆ!" என்று அந்த முரடர்கள் ஆரவாரித்தார்கள். பொன்னம்மாளும், தாமோதரனும் அப்படியே அலறி ஸ்மரணை தப்பியவர்களைப் போலானார்கள்: அடுத்த நிமிடம் அந்த முரடர்கள் அதை எடுத்துக்கொண்டு தங்கள் மோட்டாரில் ஏறிக்கொண்டு போய் விட்டார்கள்: அவர்கள் எல்லோரும் கருப்புச் சட்டை அணிந்திருந்ததால் இருளுக்கும் அதற்கும் வெகு பயங்கரமாகத் தோன்றியது.

அம் முரடர்கள் சென்று 5 நிமிடம் கழிந்த பிறகே இவ் விருவருக்கும் சற்று உயிர் வந்தது. இனி எது வந்து என்ன செய்யக் கூடும்? "ஐயோ! தாமோதரா! இப்படியோர் விதி வந்து நேரும் என்று நாம் கனவிலும் கருத வில்லையே!

இனி என்ன செய்வது?'' என்று பொன்னம்மாள் புலம்பி ளுள். "அந்த வழிபறிக் கொள்ளைக்காரர்களுக்கு நம்மிடம் இந்த ப்ளான் இருக்கிறது எவ்விதம் தெரிந்திருக்கும்? ஐயோ! அம்மா! நமக்கு டீபார்ட்டியும் வேண்டாம், இழவும் வேண்டாம். நாம் இப்போதே வீடு திரும்பி விடுவோம். வண்டியை மட்டும் திருப்பி யனுப்பி விடுவோம். அப்பா! ட்ரைவர்! தயவு செய்து நீ எங்கள் வீட்டிற்கே ஓட்டு. நாங்கள் இந்த அலங்கோலத்தி லிருக்கையில் டீபார்டிதாளு குறைவு! நேரே திருப்பு'' என்முன் தாமோதரன். வண்டிக் காரனும் நடுக்கத்தோடு "ஐயா! இதென்ன ஆபத்து! நமக்கு பெரிய கண்டமாக வல்லோ முடிந்தது! என்ன ப்ளான்னு அது? எனக்கு விசயமெ தெரியலயே!'' என்று கூறிக் கொண்டே வண்டியைத் திருப்பி வீட்டிற்கு ஓட்டினுன்.

அவர்களுக்குள்ள கலக்கமும்,கிலியும் கூறத் திறமற்று விட்டது. "அந்த மொட்டைக் கடிதத்தை நாம் சட்டை செய்யாதுபோனதன் பலனே இது!'' என்று தவிக்கிருர்கள்: வண்டிக்காரன் மீண்டும் அவ் வழியே தான் எவ்விதம் போவது என்று பயந்தவாறு, தலை தரிக்க ஓட்டத் தொடங்கி வீட்டை யடைந்தான்.

சுமார் இரண்டாயிரம் ரூபாய் தாளுமான மோதிரம்; இரண்டாயிர ரூபாய் கடுக்கன்; கெடியாரம், ஜோபியில் இருந்த 100 ரூபாய் ஆக எல்லாம் போய்விட்டது ஒரு பங்கு இருக்க, அந்த மருந்து முறை போய் விட்ட துக்கம் கூறத் திறமன்று.நாம் என்ன செய்யலாம் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிருர்கள்: ஒன்றும் புலப்படவில்லை. தங்களுக்கு இவ்விதம் நேர்ந்தது என்பதைக் கூறவும் வெட் கம். கூருமல் எவ்வித மிருப்பது. என்ற யோசனையில் இரவு முற்றும் குழம்புகிருர்கள்.

வண்டியோட்டி மெல்ல நடுங்கியவாறு வீட்டை யடைந்தான். இந்திராணி முதலியோர் இவர்கள் வரவை வெகு ஆவலோடு எதிர் பார்த்திருந்தார்கள். வண்டி வரும் சத்தங் கேட்டவுடனே இந்திராணி பெரும் ஆரவாரத்துடன் இவர்களை எதிர் கொண்டழைக்க வீதிக்கு ஓடிவந்தாள்: அங்கு கிலி பிடித்த முகத்துடன் வண்டியோட்டிமட்டும் இறங்கி "அம்மா! காரியம் மோசமாக முடிந்துவிட்டது. கள்ளனுக்கு மேல் பெருங் கள்ளன் நம் கண்ணில் மண்ணைத் தூவி ஏமாற்றி விட்டான்" என்று கூறி முடிப்பதற்குள் "ஹா! என்ன! என்ன! கொள்ளை போய்விட்டதா? அந்த ப்ளானு கொள்ளை போயிற்று! ஐயையோ! தாண்டவா! இனி வெளியில் வா: அவன் வரவில்லை: விஷயம் விபரீதமாகி விட்டது. அந்த சங்கரனையும், சீதாராமனையும் காணுமலிருக்கையிலேயே நமக்கு எதிராக வேலை செய்வதற்குத் தான் மறைந்து விட்டார்கள் என்று நான் கூறவில்லையா? நமக்கு எதிராகவே இப்போது செய்து விட்டார்கள்: இனி என்ன செய்வது! நாம் இத்தனை சிரமம் எடுத்துக் கொண்டதெல்லாம் வீணுயிற்றே!" என்று பெரியதாக அலறினுள்.

இதற்குள் மறைந்திருந்த தாண்டவராயன் முதலியோர் வெளியில் வந்தார்கள். "ஐயோ! நான் கூட அன்றே நினைத்தேன். நம்மிடம் சொல்லாமல் அந்த சங்கரன் எங்கேயும் செல்லமாட்டான்: அங்ஙன மிருக்க அவன் நமக்குத் தெரியாமல் சீதாராமனையும் இழுத்துக்கொண்டு மறைந்திருந்து இக் காரியத்தைச் செய்திருக்கிருர்கள்: "ஏண்டா! நீதானே வண்டி யோட்டினுய்? ஆள் யார் என்பது உனக்குத் தெரிந்ததா?" என்ருன்.

வண்டி:—எஜமான்! எல்லோரும் கருப்பு சொக்காய் கருப்பு குல்லாய் போட்டிருந்தார்கள். முகத்தில் கூலிங்

கிளாஸ¬ போல கருப்புக் கண்ணுடி பெரியதாக அணிந்திருந் தார்கள்: மீசை கட்டையாக விருந்தது. சங்கரன் குரல் போல ஒருவனுக்கு இருந்தது. இப்போதுதான் நினை விற்கு வருகிறது; என்னைப் பார்த்ததும் அவன் விலகி இருந்து ஆட்களை ஏவினுன்.

தாண்:—ஏண்டா! அந்த ப்ளானைப் பிடுங்கிக் கொண்ட தைப் பார்த்தாயா?

வண்டி:—ஆகா! என் கண்ணுல் கண்டேன். கருப்புப் பட்டினுல் செய்த சிறிய பையில் அந்த காகிதத்தைப் போட்டு அந்த அம்மாள் தலை மயிரோடு மயிராக முடிந்துகொண்டிருந் தாள். அந்த ஆசாமி முதலில் அதைத்தான் தேடிப் பிடித்து வாங்கிச் சென்ருன்.

தாண்:—ஐயோ! நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது என்பது நிஜமாய் விட்டதே! இனிமேல் நாம் இவர்களை விட்டு விட்டு அந்தப் பயலைத் தேடவேண் டும்: அவன் எந்த பாதாள லோகத்தில் ஒளிந்திருப்பினும் நான் விடப் போவதில்லை: அவன் என்னிடமே வித்தை யைக் கற்று என்னிடமே அதைக் காட்டுகிருனு! ஆகட்டும்; அவனைக் கண்டு பிடித்து ப்ளானைக் கைப்பற்றிக்கொண்டு அவன் எனக்குச் செய்த த்ரோகத்திற்காக அவனைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்யாவிடின் என் பெயர் தாண்டவனல்ல. இது சத்தியம்: என்ன இந்திராணீ!

இந்தி:—ஆமாம். அந்தப் பாவியை இலேசில் விடக் கூடாது. நான் திடீரென்று வேலைக்குப் போகாமல் நிறுத்தி விட்டால் அந்த மனிதன் நடந்த சம்பவத்தையும், நான் நின்றதையும் ஒத்திட்டுப் பார்த்துச் சந்தேகங் கொள்வான்: பிறகு நாம் சங்கரனைக் கண்டு பிடித்து ப்ளானைப் பெற்று மருந்து செய்ய வாரம்பித்தால் நம்மைத்தான் கள்வர்க

ளென்று வெகு சுலபத்தில் கண்டு போலீஸில் காட்டிக் கொடுத்துவிடுவான். நாம் சிரமப்பட்டும் பலனில்லாது போய்விடும். ஆகையினல் நான் என்னவோ வழக்கம் போல வேலைக்குப் போய்க்கொண்டே அவனிடம் அகப் பட்டதைச் சுரண்டிக் கொள்கிறேன்: உள்ளுக்குள் வேலை யும் நடக்கட்டும்—என்ருள்.

தாண்டவராயன் இந்திராணியின் சாமர்த்தியமான புத்திக்கு மெச்சி "கண்ணுட்டீ! உன் புத்தியே புத்தி; உன் இஷ்டப்படியே செய். நான் அந்தப் பயல் சங்கரனை விடப் போவதில்லை; ஜாக்ரதை!" என்று கர்ஜித்தான். வழக்கம் போல மறு தினம் காலையில் இந்திராணி வேலைக்கு வந்தாள்: அதற்கு முன்பே சிந்தாமணியும் வந்தாள்: பொன்னம்மா ளும் தாமோதரனும் அன்று வழக்கத்திற்கு விரோதமாய் மிக்க துயரமுற்று இருப்பதைக் கண்டு "அவர்களை விசா ரிப்பதா! வேண்டாமா! என்று பெரிய குழப்ப மடைந்தாள்: எனினும் கேட்பதே சரி". என்று எண்ணினுள்:

இதற்குள்ளேயே இந்திராணியும் வந்து சேர்ந்தாள். இந்திராணியின் வண்டிக்காரன் மூலம் அவளுக்கு விஷயம் தெரிந்திருக்குமென்று தாமோதரனுக்குத் தெரியும்: ஆத லால் இந்த விஷயத்தைப் பற்றி இந்திராணி தன்னைக் கேட்பாள் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தான்: அதற்கு முன்பே சிந்தாமணி இவனைச் சந்தித்தபோது, "என்ன உடம்பு? முகம் ஏதோ ஒருவாறுக இருக்கிறதே! விஷய மென்ன!" என்று வெகு வணக்கத்துடன் கேட்டாள்.

இதைக் கேட்ட தாமோதரனுக்கு உண்மையைக் கூற மனமில்லை. இது விஷயம் இவளுக்குத் தெரியாதிருக்கையில் தான் எதற்குக் கூற வேண்டுமென்று எண்ணியவனுய், "ஒன்றுமில்லை. நேற்று முதல் தலை இடியும், காய்ச்சலுமாக

விருக்கிறது. அதனுல்தான் ஒரு மாதிரி இருக்கிறது. வேறொன்றுமில்லை.'' என்று கூறிக் கொண்டே சரியானபடி பேசாமல் போய் விட்டான். அடுத்த நிமிடமே இந்திராணி யைச் சந்திக்கையில் அவள் வெகு நாணத்துடன் பேசுவது போல அபிநயித்து, என்ன போங்கோ! இரவு ட்ரைவர் வந்து சொன்னது முதல் எனக்குத் தூக்கமே வரவில்லை. என் மனதே அத்தகைய வேதனை யடைந்தபோது உங்கள் நிலை மையைக் கூற வேண்டுமா! ஏதோ ப்ளானுமே அது விஷ யமே ஒருவருக்கும் தெரியாதே! எந்த சண்டாளர்கள் அதை அப்படிக் கண்டு கொண்டு உங்களையும் வருத்தி கொள்ளை யிட்டு, எங்கள் டீ பார்டியையும் நடக்காமல் செய்து விட்டார்களோ! தெரிய வில்லையே! இதை நினைக்க மிக்க வயிற்றெரிச்சலாக விருக்கிறது. இதற்கு மேற்கொண்டு என்ன செய்தீர்கள்?'' என்று தான் ஏதுமே அறியாத பரம சாதுவைப் போலக் கேட்டாள்.

இதைக் கேட்ட தாமோதரன் "அம்மா! இது என் னவோ பெரிய வேடிக்கையாய் ஆச்சரியமாய் நடந்திருக் கிறது. சில காலமாக என்னிடம் உள்ள ப்ளான்மீது சிலர் கண் வைத்திருக்கிறுர்கள் என்றும், அதை என்னிடமிருந்து அபகரிக்கப் போகிறுர்களென்றும், வதந்தி என் காதிற் கெட் டியது. அதுமுதல் நான் வெகு உஷாராகவே இருக்கிறேன். நேற்று களவு போனது உண்மையான ப்ளானல்ல. அது நாங்கள் வேண்டுமென்று தாயாரித்த போலி ப்ளான்; அதை வெகு ஜாக்ரதையாக வைத்துக் கொண்டிருப்பதுபோல நடித்து வருகிறேும்: இந்த உண்மையை நான் யாருக்கும் கூறியதில்லை. உண்மையான ப்ளான் இருக்குமிடத்தை இந்திரன், சந்திரன்கூட அறிய மாட்டான். அது யார் கையிலும் அகப்பட முடியாது.'' என்பதற்குள் இந்திரா

ணிக்கு உள்ளுக்குள், தான் ஏமாற வில்லை. தனக்கு இன்னும் அந்த ப்ளானைப் பெறும் சந்தர்ப்பம் இருக்கிறதென்ற பெரும் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. மேலுக்கு அதை யடக்கிக் கொண்டு வெகு அன்பு காட்கிறவள் போல "ஹா! அப்படியா! இப்போதுதான் என் மனது குளிர்ந்தது. உண்மையான ப்ளான்தான் போய்விட்டதோ என்று கலங்கிவிட்டேன்" என்று கூறியவாறு, தாமோதரனின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு தன் உத்சாகத்தைத் தெரிவித்தாள்.

இச் செய்கை தாமோதரனுக்கு அபாரமான வெறுப்பையும், அசங்கியத்தையும் உண்டாக்கியது. "சீ! பெண் பிள்ளையாம் இவள்; தானாக வலுவில் இவ்விதம் செய்வார்களா!" என்று மனத்திற்குள் திடீரென்ற ஓர் அருவருப்பு அவனிடம் உண்டாகி விட்டது. இதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் "அம்மா! தாங்கள் இவ்விதம் செய்தது அழகில்லை. எனக்கு இது பிடிக்க வில்லை." என்று கூறிக் கொண்டே எழுந்திருக்கப் போனான்.

வெகுவாய் வருத்தப் படுவதுபோல நடித்து, "ஐயையோ! நான் சுத்த மடத்தனம் செய்து விட்டேன். என் மனத்தில் தங்கள்பாலுள்ள பிரேமையைப் பன்முறை கூறி இருப்பது தாங்களறிந்ததே! அந்த மிகுதியால் தீண்டிவிட்டேன். இனி தங்கள் உத்திரவின்றி நான் எதுவும் செய்வதில்லை. சித்தத்தில் ஆயாஸங் கொள்ளலாகாது. மன்னிக்க வேண்டும்" என்று கூறி வணங்கினாள்......"ஆனால் இனி உண்மையான ப்ளானுக்கு ஆபத்தில்லையே! அதுதான் வேண்டியது!" என்றாள்.

தாமோதரன் "அது சதா என் வசமே இருக்கிறது. ஆனால் எந்த விடத்திலிருக்கிறது என்பதை யாராலும்

கண்டு பிடிக்க முடியாது.'' என்று கூறிக் கொண்டிருக்கையில் டெலிபோன் மணி யடித்ததால் அங்கு போய் விட்டான். அந்த சம்பாஷனை அதோடு நின்றுவிட்டது. இந்திராணி அளப்பரிய சந்தோஷத்துடன் அன்று வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். இவளுடைய உற்சாகங் களை உச்ச நிலையை அடைந்து ஜொலிப்பதைக் கண்ட தாண்டவராயன் "கண்ணே! விஷயமென்ன?'' என்றான். இந்திராணியும் உண்மையை ஆதியோடந்தமாகக் கூறி விட்டாள். தாண்டவராயன் இதைக் கேட்டு பெருமிதமான பூரிப்பை யடைந்து மீசை முறுக்கி, மார்பு தட்டி அமர்க்களம் செய்தான். "இந்திராணீ! இனி எப்படி வகை செய்யலாம்?'' என்றான்.

இந்தி:—வகை என்ன! மூலாதாரந்தான் அம்மனிதன் கையிலேயே இருக்கிறது. அவனை எப்படியும் நான் என் வலையில் போட்டு அதைக் கொண்டு வந்து விடுகிறேன்; சமயத்தைப் பார்த்துச் செய்கிறேன்—என்றாள். வழக்கம்போல அவள் ஆபீஸுக்குச் செல்வதும், வருவதும் வெகு ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தாள்.

தாமோதரனுக்கோ, உண்மையான ப்ளான் போய் விட்ட துக்கம் தாங்க முடியவில்லை. அதை வெளியிடாமல் இந்திராணியிடம் சொல்லியதுபோல "போலி ப்ளான் களவு போய்விட்டதாகவும் அதைக் கண்டு தயாரிக்கும் மருந்துகள் வியாதிக்கு ப்ரதிகூலத்தை யுண்டாக்கி விடுமென்றும் ஆகவே அதை அபகரித்தவர்கள் மருந்து தயார் செய்வதில் உபயோகமில்லை என்பதை யறியவும்:'' என்று சகலமான பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்துவிட்டான்.

* * * *

நாட்கள் சிலவாகிப் பலவாகி, வாரங்களும் சில கழிந்

தன. இந்திராணி சமயத்தை எதிர்பார்த்து வெகு ஒழுங்காக வேலை செய்துகொண் டிருக்கிறாள். பொன்னம்மாளும் தாமோதரனும் ரகஸியத்திலேயே, துப்பறிபவனை வைத்து அந்த ப்ளானைப் பற்றி விசாரித்து வந்தார்கள். அதே ஏக்கத்தினால் தாமோதரனுக்குப் பெரும் மன அதிர்ச்சி ஏற்பட்டு அதே கவலையால் நோய் கொண்டவன் போலாய் விட்டான்.

இவன் நாளைக்கு நாள் மெலிவதைக் காண பொன்னம்மாளின் கவலையும் அதிகரித்தது. தாமோதரன் ஏதோ சொந்த வேலையின் நிமித்தம் வெளியில் சென்றான்: அந்த சமயம் இவன் சென்ற வீதியில் ஓர் மாடி வீட்டிற்குள்ளிருந்து சிலர் இறங்கி வந்து, வீதியிலிருந்த மோட்டாரில் ஏறும்போது தாமோதரன் பார்த்து அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். அவ்வாறு பிரமிப்பதற்குக் காரணம் யாதாக விருக்கும்! தாமோதரனின் பழைய சினேகிதர்களாகிய சோதாக்கள்—தாண்டவராயனும், மற்றவர்களும்—இந்திராணியுடன் வெகு சல்லூக்காகப் பேசிக்கொண்டு வண்டியில் சென்றதேயாகும்.

“இது பரியந்தம் இந்திராணியை ஓர் உயர்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவ ளென்றும், மகா பரிசுத்தவதி என்றும் எண்ணி அவளை ஓர் உயர்தரப் படிக்கட்டில் வைத்து ஏமார்ந்தோமே! ஆகா! என்ன மோசம்! இந்தக் கூட்டத்தின் கையாளாக வன்றோ அவள் அமைந்திருக்க வேண்டும். அடாடா! எனக்கு டீ பார்ட்டி கொடுப்பது போலக் கொடுத்து என்னுடைய ப்ளானை யபகரிக்க அவளே இவ்வித சூழ்ச்சி செய்திருப்பாளா? இல்லையேல் உயர் குலத்துதித்த உத்தமப் பெண்மணியாக விருப்பின் ஏன் இந்த அல்ப சோதாக் கூட்டத்துடன் சகவாசம் செய்வாள்?

இதில் ஏதோ பெரிய மோச மிருக்கவேண்டும். இதை நாம் கண்டு பிடிக்காது விடக்கூடாது'' என்று தீர்மானித்து அவர்கள் சென்ற கார் நம்பரைப் பார்த்துக் கொண் டான்: பிறகு தன் வீட்டிற்கு வந்து தான் கண்ட விஷயங் களைத் தன் தாயாரிடம் கூறினன்.

இதைக் கேட்ட பொன்னம்மாள் ஆச்சரிய மடைந்த தோடு அபாரமான கவலையை அடைந்தாள். "தாமூ! எனக் கென்னவோ இப்போது தோன்றுகிறது. அந்த ப்ளானை அவளைச் சேர்ந்த கூட்டத்தினர்தான் அபகரித்திருக்க வேண்டும். ஐயையோ! அந்த சிறிய துண்டுக் கடிதத்தைப் பற்றி நாம் சற்றும் சட்டை செய்யாது போய்விட்டோமே! அதை நமக்கு அவளே தன்மீது சந்தேக மில்லாதிருக்கும் பொருட்டு மொட்டையாக அனுப்பி இருப்பாளோ! ஒன் றும் தெரியவில்லையே! இப்போது அந்த ப்ளான் அவளை விட்டு வேறு எங்கேயும் போகவில்லை என்று நன்ருகத் தோன்றுகிறது. அந்த ப்ளானை அந்த பஜாரியிட மிருந்து எவ்விதம் நாம் பெறுவது? தர்ம சங்கடமாக விருக்கிறதே: அவளை நாம் இப்போது வேலையை விட்டு நீக்காது ஓர் பந் தத்தைச் செய்து அவளிட மிருந்து அதை கிரகிக்கவேண் டும். சிந்தாமணியைக் கலந்துகொண்டு செய்யலாமா!'' என்று கேட்டாள்.

தாமோத:—அம்மா! நாம் எதிலும் அவசரப் படக் கூடாது. நாம் அந்த இந்திராணியை உயர்வித்துச் சீமாட்டி என்று நம்பி பெரு மோசம் போனோம்; சிந்தா மணியோ, நம் கம்பெனியில் வந்த நாள் முதல் அவளு டைய அடக்க ஒடுக்கம், பணிவு; உத்தமமான குணம், தலை நிமிராத ஒழுக்கம் முதலியவைகளைக் காண அவனிடத்தில் தானுக நன்மதிப்பும், அன்பும் சுறக்கின்றன. அவளும்

நம்மை வெகு மேன்மையாக மதித்திருக்கிறுள்: அங்ஙன மிருக்க நாம் இக் கேவலத்தை அவளிடம் எவ்விதம் தெரி விப்பது என்று லஜ்ஜையாக விருக்கிறதம்மா! நீ நன்ருக யோசித்துக் கூறு.

போன்ன:—ஆமாம்: வாஸ்தவம்தான்! அந்நங்கை நல் லாளின் நடத்தையைக் கண்டு மனம் வியப்புறுகிறேன். உரத்த குரலில் பேசி அவளை நான் கண்டதே இல்லை. எந்த சமயத்திலும் சாந்தமே குடிகொண் டிருக்கிறுள்: நாம் ஏமாந்த விஷயத்தைத் தெரிவிப்ப தென்றுல் வெட்கமாயு மிருக்கிறது. சரி; இனிமேல் நீ என்ன செய்யவேண்டுமென் ருல் அவள் உன்னை நேசிப்பதாக நடிப்பதுபோல அவளை நீயும் நேசிப்பதாக மிக மிக இனிப்பு வார்த்தைகள் கூறி நடித்து அவளை மயக்கிப் பின் அதை யபகரித்து விடு; நானும் அதற்குத் துணையாகவே நடிக்கின்றேன்—என்று பேசி முடிவு கட்டிக் கொண்டார்கள்.

மறு தினம் காலையில் வழக்கம்போல இந்திராணி வேலைக்கு வந்தாள்: அன்று அவள் தனக்குஏதோ உடம்பு சரி யில்லாதவளைப் போன்று "அப்பா, அம்மா" என்று அலற் றியவாறு தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். இதைக் கண்ட தாமோதரன், "ஆகா! துஷ்ட ஜந்துவே! உன்னுல் மோசம் போனுமே!" என்று உள்ளுக்குள் எண்ணியவாறு, அருகில் சென்று தன் வேலையை ஏதோ கவ னிப்பது போலப் பாசாங்கு செய்துவிட்டு..."என்ன உடம்பு? தலையைப் பிடித்துக்கொள்ளுகிறீர்களே?" என்று கேட்டபடியே உட்கார்ந்தான்.

இந்தி:—(இவ்விதமான சமயத்தையே எதிர் பார்த் திருந்தாளாதலால் வெகு நாணிக் கோணி, குலுக்கிப்

பிதுக்கி) ஒன்றுமில்லை: ஏதோ சற்று தலைவலி: இரவு தூக்கமே கிடையாது. அதனால் இப்போது தலை வலிக்கிறது.

தாமோ:—ஏன் தூக்கமில்லை....எங்கேனும் ட்ராமா, சினிமா போயிருந்தீர்களா? தலைவலியாயின் இன்று ஏன் லீவ் வாங்கிக்கொள்ளக் கூடாது. தேக அசுகமாயின் எப்படி வேலை செய்ய முடியும்?

இந்தி:—ஊம். இதற்கெல்லாம் நான் லீவு எடுப்பதென்றால் தினம் எடுக்கவேண்டியதுதான். என்னைச் சில தினங்களாகவே தலைவலியும் உடம்பு ஓய்ச்சலும் பீடிக்கின்றன. நான் என்ன செய்வது?

தாமோ:—ஏனம்மா அப்படி உடம்பு? தாங்கள் நல்ல டாக்டரிடத்தில் ஏன் மருந்து சாப்பிடலாகாது? உடம்பு நன்றாக விருந்தாலல்லவோ வேலை செய்ய முடியும்? எங்கள் வைத்தியரிடம் வருகிறீர்களா?

இந்தி:—நான் என்ன பதில் கூறுவேன்? நான் முதலில் இங்கு வரும்போதே சொன்னேன். எனக்கு வேலை செய்து பிழைக்க வேண்டுவதில்லை என்று. ஏதோ என் விசனம் மறையும் பொருட்டு வந்தேன். வந்த விடத்தில் ஓர் பெரிய நோயிக்கு அடிமையாகி விட்டேன். இதை ஜாடைமாடையாகத் தங்களிடமே பன்முறை தெரிவித்திருக்கிறேன். எனது நோயைத் தீர்க்கும் மருத்துவன் உலகத்தில் தங்களையன்றி வேறு உண்டா! இதை வெளிப்படையாயும் கூறிவிட்டேன். நான் வயிற்றுக் கில்லாமலா இங்கு வந்து உழைக்கிறேன்! தங்களின் தரிசனத்திற்கும், தங்கள் கம்பெனியில் வேலையாவது செய்யலாமே என்கிற ஓர் ஆசையினால் நான் அலைகிறேன். ஊணும் உறக்கமும் ஒழிந்து எத்தனையோ நாட்களாயின" என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

கள்ளனுக்குள் குள்ளன் என்பதுபோல தாமோதரன் அதற்கிசைந்த பதில் கூறி நடித்தாக வேண்டும். அவ்வாறு செய்யவோ அவன் மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. அவன் மனத்துள் அழுந்திக் கிடக்கும் உருவத்திற்கு விரோதமாக இந்த மூதேவியை நடத்தச் சங்கடமுண்டாகிறது. என்ன செய்வான் பாவம்! கடவுளே! என் மனப் பூர்வமான—பரி சுத்தமான—காதலை நான் ஓர் உயர்ந்த உத்தமியிடம் அடையும்படியாகக் கருணை செய்தாய்! மனக் கோட்டையை விட்டு இன்று தினம் வரையில் பெற்ற அன்னைக்கும், காதலித்த காரிகைக்கும் வெளியிடாது என் லஜ்ஜையும், அபாரமான வெட்கமும் என்னை மூடிவிட்டன. இந்த சனியனிடத்தில் மனம் பிடிக்காது நான் எவ்விதம் உரையாடுவது? ஈசா!'' என்று உண்மையிலேயே விசனித்தான். தனக்கு முக்கியமான ப்ளானைக் கைக் கொள்ள வேண்டி எல்லா வற்றையும் சகித்துக் கொண்டு...கண்ணே! "இந்திராணீ! நான் என்ன பெரிய முட்டாள் என்று எண்ணி விட்டாயா! உன்னைப்போலவே நானும் வருத்தப்படுவதை நீ யறிய மாட்டாய்! என் சுபாவம் மிக்க லஜ்ஜை யுற்றது. அதனால் நான் என் கருத்தை வெளியிடாது பொறுமையாயிருக்கிறேன்; எனினும் என் தாயாரும் நானும் வீணுகக் காலத்தைக் கழிக்க வில்லை. எப்பொழுது விவாகத்தை முடிக்கலாம் என்று யோசித்துக் கொண்டுதா னிருக்கிறோம்; அதை நாங்களே உன்னிடம் தெரிவிக்க நினைத்தோம். அதற்குள்ளாக அது வெளியாக வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.'' என்றான்.

இதைக் கேட்ட இந்திராணியின் சந்தோஷத்தைக் கூற வேண்டுமா! தன் காரியத்தில் ஜெயம் பிறந்து விட்டது என்று மனத்திற்குள் துள்ளிக் குதித்தாள். "ஆ! அப்ப

டியா! இதைக் கேட்ட என் தேகமே சிலிர்க்கின்றதே! மயிர் கூச்செரிகின்றதே! என் வியாதி எல்லாம் போய் விட்டது. இச் சந்தோஷச் செய்தியை என் தாயார் கேட்டால் அளப் பரிய சந்தோஷ மடைவாள். தாங்கள் இனியும் லஜ்ஜை லஜ்ஜை என்று நாட்களைக் கழிக்காமல் விவாகத்திற்கு ஏற் பாடு செய்து விடுவதுதான் நல்லது. நான் இனி என் வீட் டிற்கே போகமாட்டேன்; இன்று முதல் நான் இங்கேயே தானிருக்கப் போகிறேன்; என்ன சொல்கிறீர்கள்?" என்று தாமோதரனின் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

தாமோ:—ஆகா! அப்படியே செய்; உன்னிஷ்டம் எப் படியோ அப்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன்; அதோ என் தாயாரும் வருகிறாள் "அம்மா! நாம் நெடு நாட்களாக யோசித்துக் கொண்டிருந்த விஷயம் இன்று முடிவாகி விட்டது" என்றான்.

இதற்குள் இந்திராணி "மாமீ! என்னை அங்கீகரிக்க வேண்டும்" என்று கூறிப் பொன்னம்மாளுக்கு வணங்கி னாள்; மூவர் நடிக்கும் நாடகம் வெகு ஜோராக நடக்கின் றது. முதல் சீன் முதல் தரமாகவே முடிந்தது. இதையே ஒரு சாக்காகக் கொண்டு இந்திராணி "இவ்விடத்திலேயே தங்கி, இரவு பெட்டி முதலியவற்றைத் திறந்து ப்ளானைக் கொள்ளை யடிக்க வேண்டும்; பாலில் மயக்கத்தைப் போட்டு இருவருக்கும் கொடுத்து விட்டு இன்றே வேலையை முடித்து விடுவது" என்று தீர்மானித்துக் கொண்டாள்..

உடனே வேலைகள் முடிந்ததும் டிப்பனுக்குப் போவது போலச் சென்றாள். அக் கம்பெனிக்குச் சமீபத்தில் ஒரு ஓட்டல் இருக்கிறது. அதில்தான் இவர்கள் முக்கியமான சமயம் சந்திப்பது வழக்கம். அன்று அங்கு சென்று ஒரு தனித்த விடுதியில் வெகு அட்டகாஸத்துடன் புகுந்தாள்.

அங்கு தயாராக வீற்றிருந்த தாண்டவராயன் "ஹல்லோ! என்ன செய்தி! இன்னும் எத்தனை நாளாகும்? வேலையைச் சீக்கிரம் முடிக்கத் தெரிய வில்லையே! அந்த இரண்டு பயல்களும் அகப்படவே இல்லை. என்ன செய்வது?'' என்றான்.

இந்தி:—என்ன ஆத்திரப் படுகிருயே! இன்றுதான் நம் காரியம் ஜெயமாகும் கடைசீ தினமாக விருக்கலாம். அத்தனை ஏற்பாடுகளைச் செய்து விட்டேன். இன்று முதல் நான் அங்கேயே இருக்கப் போவதாயும் கூறி விட்டேன்; இன்று ஒரு இரவிலேயே நான் வேலையை முடித்து விடுகிறேன். நீ என்ன செய்ய வேண்டு மென்றால் மயக்க மருந்து, ஒரு ரிவால்வர், முக மூடி இவைகளை எனக்கு இப்போதே கொடுத்து விடு. இரண்டாவது, நீங்கள் உங்கள் கூட்டத்துடன் அந்த பங்களாவின் தோட்டத்தில் நின்று கொண்டிருங்கள். நான்கு புறமும் பார்த்துக் கொண்டே வா! என்னுடைய பாக்கெட்டு விளக்கின் வெளிச்சம் எப்போது தெரிகிறதோ அப்போது அதைக் கவனித்துக் கொண்டு அந்த விடத்திற்கு வந்து விடுங்கள். இதுதான் சமிக்ஞை; இதற்குப் பிறகு நாம் அங்கு அகப்படும் சகலத்தையும் எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி விடலாம். ஞாபகமிருக்குமா! ஜாக்ரதை; ஜாக்ரதை'' என்றாள்.

தாண்டவராயன் அபாரமான சந்தோஷத்துடன் இந்திராணியைத் தட்டிக் கொடுத்தான். ஒரு ரிவால்வர், மயக்க மருந்து, முக மூடி, மூன்றும் கொடுத்தான். அவற்றை வாங்கித் தன் மடியில் மறைவிடமாகச் சொருகிக் கொண்டாள். "சரி! நான் சொன்னபடி செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு வெளியில் வந்தாள். ஒன்று மறியாத மகா சாதுவைப் போலத் தன் வேலை ஸ்தலத்தில் வந்து அமர்ந்து விட்டாள்.

T. S. K.
B.A. B.L.
Tiruppur.

## 4-வது அதிகாரம்

### கபட சூட்சி—களிப்புறும் காட்சி

சூரியன் அஸ்தமித்து விட்டது. இந்திராணி அன்று வீட்டுக்குப் போவதில்லை என்று கூறியதும், பொன்னம்மாளும் தாமோதரனும் அவளை அன்று இங்கேயே நிற்கச் செய்து ஒரு தினம் பக்ஷமாக விருப்பதுபோலக் காட்டிப் பேசி அவளிட மிருக்கும் பொருளை வாங்க எண்ணினார்கள். ஆதலால் அவளுக்குச் சரியாகவே பேசிவிட்டார்கள்.

கம்பெனியில் வேலை முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள்: இந்திராணி மட்டும் வெகு சந்தோஷத்துடன் "மாமீ!" என்று உறவு முறையுடன் அழைத்தபடியே பொன்னம்மாளிடம் சென்று பக்கத்தி லமர்ந்தாள். "மாமீ! நான் அந்த வேலையைச் செய்கிறேன். இதைச் செய்கிறேன்:" என்று கேட்டு செய்யத் தொடங்கினாள். இரவு போஜனம் முடிந்ததும் தானே வெற்றிலைப் பாக்கும், பாலும் கொடுக்கத் தீர்மானித்தாள்.

ஆனால் வழக்கம்போல வேலைக்காரனே வெற்றிலையைக் கிழித்தும், பாலை ஆற்றியும் வைத்துவிட்டான். அதனால் இவளுக்கு மயக்க மருந்தை எப்படிக் கரைப்பது என்ற யோசனை யுண்டாகிவிட்டது. ஆற்றி வைத்திருக்கும்

பாலில் அப்படி இப்படி பார்த்து சடக்கென்று மாத்திரையைப் போட்டு தாமோதரனுடைய மேஜையின் மீது அதைக் கொண்டு தானே வைத்துவிட்டாள்.

பிறகு இருவரும் ஏதோ வேடிக்கையார்த்தமாகப் பேசிக்கொண்டே யிருக்கையில் அவன் பாலைக் குடித்து விட்டான்: இந்திராணியின் சந்தோஷம் உச்ச நிலையை அடைந்தது. மயக்கம் வந்து, விழும் நிலைமையை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள்: பொன்னம்மாள், இந்திராணி இருவரும் கூட பாலைக் குடித்தார்கள்: குடித்துப் பத்து நிமிடத்திற் கெல்லாம் இந்திராணிக்கு அவளை யறியாத மயக்கம் வந்து கிறுகிறு என்று சுற்றிக் கீழே தள்ளிவிட்டது. இதைக் கண்ட இருவரும் அடங்காத ஆச்சரியத்தை யடைந்து, "ஐயோ! இதென்ன! மயக்கம் வந்துவிட்டதே!" என்று பேசிக்கொண்டே இருக்கையில் தபதப வென்று யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்த உடனே முகமூடியுடன் இரண்டு மூன்று உருவங்கள் கையில் துப்பாக்கியோடு அங்கே வந்து "வாயைத் திறந்தால் சுட்டுவிடுவேன்: ஜாக்ரதை!...குரலையே காட்டக்கூடாது" என்று அதட்டி விட்டு விளக்கை எல்லாம் அணைத்துவிட்டார்கள். இந்திராணியின் கூட்டத்தினர் அவள் செய்த ஆக்கினைப்படிக்கு மெத்தையை நோக்கியவாறு நாற் புறமும் நின்று கொண்டிருந்தார்கள்: மெத்தையின் வடவண்டைப் பக்கத்து ஜன்னல் வழியாக பாக்கெட்டு விளக்கின் வெளிச்சம் பிரகாசமாகத் தெரிந்த உடனே வீதியிலிருந்த எல்லோரும் வெகு விரைவில் மெத்தையில் அந்த வெளிச்சம் கண்ட இடத்திற்கு வந்தார்கள்.

எங்கும் இருள் சூழ்ந்து கிடக்கிறது. கையிலுள்ள

பாக்கெட்டு விளக்கு மட்டும் முணுக்கு முணுக்கு என்று தெரிந்தது. அங்கு வந்தவர்கள், "இந்திராணி! அகப்பட்டு விட்டதா! ஆசாமிகள் பூர்ண மயக்கத்தில் விழுந்துவிட்டார் களா! இப்போது நாம் என்ன செய்யவேண்டும்?'' என்றார்கள்.

முக மூடி யணிந்திருந்த ஒரு உருவம், "இதோ இங்கு வாருங்கள்'' என்று கூறி யழைத்துக் கொண்டு வந்து நிற்கச் செய்ததும் ஸ்விச்சை திடீரென்று அழுத்தி விட்டது. கோடி சூர்யப் பிரகாசம் போன்ற வெளிச்சம் உண்டாகி விட்டது. தாண்டவராயனும் அவன் கூட்டமும் அங்கு ஸ்ம ரணையற்று விழுந்து கிடக்கும் இந்திராணியைப் பார்த்த உடனே "ஐயோ! மோசமே! ஹா!''...என்று அலறி விட் டார்கள். அதே சமயம் முக மூடியுடன் இருந்த ஒரு உரு வம் விசில் அடித்தது.

தக்ஷணமே தபதபவென்று போலீஸ் சேவகர்கள், இன்ஸ்பெக்டர்கள், மேல் அதிகாரிகள் முதலியோர் வந்து சூழ்ந்து வளைத்துக் கொண்டு வந்த ஏனையோரையும் கைது செய்து விலங்கை மாட்டியபடியே, "அரசாங்கத்திற்குத் தெரியாமல் வெடி மருந்துகளைச் செய்வதும், துப்பாக்கியைக் கள்ளத் தனமாக விற்பதுமான வியாபாரத்திலிருந்து ஒளிந்த படி எத்தனை நாளைக்குப் பிழைக்க முடியும்? தன் வினை தன்னைச் சுடும் என்ற வாக்கை மறந்து விட்டீர்களா?

மகிழம்புரி ஜமீந்தாரிணி வீட்டில் கொள்ளை யடித்த குற்றத்தில் தண்டனை யடைந்து சிறை சென்று அங்கிருந்து உங்கள் தயவால் தப்பிய கைதியாகிய இவள் இந்திராணி என்ற பட்டப் பெயரில் இப்போது இந்த பரிசுத்தமான மனி தனை மோசம் செய்ய நீங்கள் செய்த சதிகள் தெரியாமல் அழுந்தி விடுமென்று நினைத்தீர்களா! பரம பாதகர்களாகிய உங்களை எங்களுக்குப் பிடித்துக் கொடுத்த இந்த அம்மா

ளுக்கு நாங்கள் என்ன பிரதி செய்தால்தான் போதும்? "அம்மா! இனி இந்த மூடி எதற்கு?" என்றதும் முக மூடிகள் எல்லாம் பறந்தன.

சந்திர பிம்பம்போல, ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கும் சிந்தாமணி ப்ரஸன்னமானுள். இந்த அத்யாச்சரியமான சம்பவத்தைக் கண்ட பொன்னம்மாளும் தாமோதரனும் "ஹா! சிந்தாமணீ! சிந்தாமணீ! நீயா இங்கு நிற்கிருய்? உண்மையான தோற்றமா இது!" என்று கூறியவாறு அவ ளருகில் வந்ததும், பொன்னம்மாள் சிந்தாமணியைக் கட்டிக் கொண்டாள்.

சிந்தாமணி:—(போலீஸாரை நோக்கி) ஐயா! நீங்கள் உங்கள் உத்யோக முறையில் அரசாங்கச் சட்டத்தின் படிக்கு தீயவர்களைப் பிடிப்பதும் தண்டிப்பதுமான தொழிலைக் கொண்டிருக்கிறீர்கள். சற்று ஆராய்ச்சி செய்து பார்த்தால் கடவுளின் கீழ் உள்ள ஒவ்வொருவரும் பிறர் நலங் கோருவதும், பிறர் பொருட்டுழைப்பதும், பிறர் துயராற்றுதலும், பிறருக்குத் தீங்கிழைக்கா திருத்தலும், பிறருக்குத் தீங்கு யாரேனும் செய்வதைக் கண்டு வாளா விருந்திடாது அதைக் களைந்தெறிய உதவுவதும், இன்னும் இதுபோன்ற பல சட்டங்கள் அக் கடவுளால் அளிக்கப்பட்டதை மனித ஜென்மம் எடுத்தவர்கள் செய்ய வேண்டியது கடமை என்பதே என்னுடைய துணிபு. துஷ்ட ஜெந்துக்களாகிய பாம்பும், தேளும் செல்வதைக் கண்டு நாம் பேசாம லிருப்போமா! உடனே அடித்துக் கொல்லவில்லையா? அதுபோல துஷ்ட செய்கை யுள்ளவர்களையும் அவ்வாறு செய்வது கடமை என்று எண்ணியே தங்களுடைய துணையைக் கொண்டு அவர்களைப் பிடித்ததும், அவர்களின் இடரைத் தீர்த்ததும் என் பிறவியின் கடமையாகும். இதற்கு எதற்காக

என்னைப் புகழச் செய்யவேண்டும். உங்கள் வேலையாகிவிட்ட தல்லாவா?'' என்றாள்.

இதைக் கேட்ட தாமோதரனும், பொன்னம்மாளும் கட்டு மீறிய வியப்பும், சந்தோஷமும் ஒருங்கே கொண்டு பதில் பேசிவுமாட்டாது கல்லாய் நின்றார்கள். போலீஸார் சிந்தாமணிக்கு வந்தனங்கள் செய்த பின்னர், இந்திராணி யைத் தூக்கும்போது மடியிலிருந்த துப்பாக்கியைக் கண்டு எடுத்தார்கள்: இவள் துப்பாக்கி வைத்திருப்பதை யறியாத தாயும் மகனும் பிரமித்து, "ஐயோ! இதனால் நம்மைச் சுட்டுக் கொல்லத் தான் இங்கு தங்கினாள் போல விருக்கிறது. ஆ! கடவுளே எங்களைக் காப்பதற்குத் தான் இக் காரிகையை அனுப்பினாயா?'' என்று தோத்தரித்தார்கள்.

பிறகு போலீஸார் எல்லாக் கைதிகளையும் வீதியில் தயாராக விருந்த வண்டியில் ஏற்றி ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றார்கள். சிந்தாமணியும் வெகு மரியாதை யாக "அம்மணீ! ஐயா! நான் வீட்டிற்குச் செல்கிறேன்: நாளைக் காலையில் பேசிக்கொள்ளலாம்:'' என்று போகப் புறப்பட்டாள்.

பொன்னம்மாள் அவள் கையைப் பிடித்துக் கொண்டு "ஐயோ! நீ இனி இந்த ராத்திரியில் செல்வதாவது? அது முடியாது. நீ எங்கள் உயிரையே காப்பாற்றிய ஓர் பெரிய விந்தையை எங்களால் அறியக் கூடவே இல்லை. அதை எல்லாம் நீ கூறு. நீ சொந்தமாகக் காப்பாற்றிய மனிதர் களை நீ சொந்தமாக எண்ணுமல் செல்வது அழகல்ல: என் செல்வச் சீமாட்டியே! இங்கு உனக்கு வித்யாசமெதற்கு? உட்காரு.'' என்றாள்.

சிந்தா:—அம்மணீ! தாங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவம்: பனைமரத்தடியிலிருந்து பால் குடித்தவன் கதைபோல

த்தான் என் விதி யமையும்: ஆதலால் நான் இரவு என் வீட்டை விட்டு வெளியிலிருக்க முடியாத நிலைமையி லிருக்கிறேன்: காலையில் கட்டாயம் வருகிறேன்.

போன்:—அப்படியாயின் நாங்களும் உன்னோடு வருகிறோம்: உன் வீட்டிலிருப்போருக்குச் சொல்லி விட்டு உன்னை யழைத்துக்கொண்டு வருகிறோம்:......

தாமோ:—தயவு செய்து இங்கிருக்கலாகாதா? அம்மாவை வேண்டுமானால் சென்று சொல்லிவிட்டு வரச் சொல்லுகிறேன்: அம்மா!...தாங்கள் மறைந்திருந்து செய்த பேருதவியின் விவரங்களை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?'' என்று கெஞ்சிக் கேட்டான்.

சிந்தாமணிக்கு அதைத் தட்டவும் முடியவில்லை. என்ன செய்வாள் பாவம்! "ஐயா! என்னுடைய சரித்திரம் ஓர் கதை போன்றது. அதை நீங்களறிந்தால் பிறகு விசனிப்பீர்கள். நான் இன்று இங்கு நிற்பேனேயானால் நாளைய தினம் என் கதியாகும் வேடிக்கையை நீங்கள் சகிக்க முடியாது. ஆதலால் நான் சென்று,நாளைக் காலையில் கட்டாயம் வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

இரவு இவ் விருவருக்கும் தூக்கமே பிடிக்கவில்லை. தாமோதரனின் மனத்தில் ஏற்கெனவே நிறைந்திருந்த எண்ணம் மீண்டும் தலை சிறந்துவிட்டது. இன்னதென்று விவரிக்க முடியாத விதமாகப் படுக்கையி லமர்ந்தான். தன்பொருட்டு அத் தருணீமணி மறைந்து செய்த வேலையின் ஆச்சரியத்தைக் கூறவே திறமன்று. "ஐயோ! இம்மங்கை நல்லாள் அன்று நம்மைக் கேட்டதற்குச் சரியாகவே விடை கொடுக்காது போய்விட்டோமே! பாழும் லஜ்ஜையல்லவோ என்னைப் பாழாக்கிவிட்டது. என் மனப் பூர்வமாக அம் மங்கையை நான் மானஸீகமாக நேசித்தும் அவளுடன் பேசாமலும்,

பகிரங்கமாகத் தெரிவிக்காமலும் அன்னியன் போலவே இருந்துவிட்டோமே! நான் சர்வ முட்டாள்தனம் செய்து விட்டேன்: இனிமேல் நான் எனக்குள்ள பிரியத்தைத் தெரிவிப்பதெனின் அம் மடந்தை நமக்குச் செய்த உதவியைக் கண்டபிறகு காதல் கொண்டதாக வன்றோ தோன்றும்:" என்று பலவிதமாக எண்ணியவாறு இருக்கையில் அவனுடைய படுக்கையில் ஒரு கவர் தென்பட்டது.

அதற்குள் இவர்கள் கையை விட்டு இழந்து விட்ட மருந்து செய்யும் முறைகளடங்கிய காகிதம் கருப்புப் பையுடன் கட்டப்பட்டு அப்படியே இருந்ததைக் கண்டு அளப்பரிய ஆச்சரியத்தை யடைந்து அதைப் பிரித்துப் பார்த்து விட்டு, அதோடு கூட விருந்த கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான்.

"அன்பிற் சிறந்த எஜமானர் அவர்களுக்கு, பேதையாகிய சிந்தாமணி செய்யும் வந்தனங்கள்.

ஐயா! நான் இக் கடிதம் எழுதுவது தங்களுக்கு மிக மிக வியப்பாக விருக்கலாம்: எனினும் தற்போது நான் எழுதவேண்டிய சமயம் நேர்ந்துவிட்டது. தாங்கள் இக் கடிதத்தைப் படிக்கும் முன்பே சில ஆபத்துக்களினின்று விலகி அதில் நான் சம்மந்தப்பட்டதைத் தாங்களறிந்து விடுவீர்க ளென்று நம்புகிறேன். அவ்வாறு நீங்களும், உங்கள் தாயாரும் "எக்காரணம் பற்றி நம் விஷயத்தில் இம்மங்கை இத்தகைய முயற்சி எடுத்துக் கொண்டாள்?" என்று நினைப்பீர்கள். அது சகஜமே! அதை நிவர்த்திக்கவே இதை எழுதுகிறேன்.

ஐயா! சிலவாண்டுகளுக்கு முன்னர்...மாதம்...—தேதி......செவ்வாய்க்கிழமை யன்று தாங்கள் சில துஷ்டர்களுடன் நேசங் கொண்டு திரிந்த காலையில் அவர்கள்

எல்லாம் குடித்துவிட்டுத் தங்களையும் குடிக்கும் படிக்குக் கூறத் தாங்கள் அதை மாத்திரம் மறுத்ததற்குக் குடி வெறியால் தங்களை அடித்துப் போட்டுவிட்டுச் சென்றார்கள்: பிறகு பிரக்ஞை யற்றிருந்த தம்மை ஓர் வண்டியிலமர்த்தி தம் வீட்டில் கொண்டு விட்டது அக் காலை உமக்குச் சரியானபடி ஞாபகமில்லை எனினும் இச் சம்பவம் நடந்தது மறந்திருக்கா தென்று நினைக்கிறேன்: அப்போது நான் சிறியவளே யாவேன்; தம்மிடம் காதல் கொண்டு இக்காரியம் செய்ததல்ல.

பிறகொரு சமயம் அத் துஷ்டர்களுடன் சீட்டாடுகையில் தாம் பணம் வைக்க மறுத்ததற்கு அவர்கள் நெத்தியில் முரட்டுத்தனமாக அடித்து ரத்தம் வழிய,அப்போது பக்கத்துச் சந்து குழாவில் ரத்தத்தை யலம்ப வந்தபோது அதை யலம்பி மருந்து போட்டுக் கட்டி விட்டது நினைவிருக்கலாம்.

வேறொரு சமயம் ரங்க ராட்டினத்தில் தடி தடியாக நீங்கள் எல்லோரும் சுற்றியபோது தலை சுற்றலும், புரட்டலும் அதிகரித்து, இறங்கி கீழே விழுந்து விட்டதும், தெருவில் கும்புகூடிவிட்டதும்,தாங்கள் வாந்தி எடுத்துக்கொண்டு அதன்மேலேயே புரண்டதும் அப்போது தண்ணீர் ஊற்றித் தம்மைக் கழுவி ஒரு சோடா உடைத்துக் கொடுத்துத் தேற்றியதும் ஞாபக மிருக்கலாம்.

ஐயா! இந்த பழங் கதைகள் எல்லாம் இப்போது எதற்கு இங்கு குறிப்பிட வேண்டுமென்று நீங்கள் நினைக்கலாம். அக்காலை நானும் சிறியவளே! காதல் கொண்டதனால் செய்தவையல்ல. தமக்குச் செய்தது போல இன்னும் அனேகருக்கு—என் கண்ணில் பட்ட எந்த மனிதருக்கும்—என்னால் செய்யக் கூடிய உதவியைச் செய்து கொண்டுதான் வருகிறேன். இப்போது தங்கள் விஷயம் மட்டும் சம்மந்தப்

பட்டவை யாகையினுல் இதை எழுதுகிறேன்; இதைக் கொண்டு நான் தற்பெருமை யடைந்து பேசுவதாக எண்ண வேண்டாம்.

ஐயா! நான் யார் என்பதைத் தாமறியும் பொருட்டுப் பழங் கதைகளில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டேன்; இனி நடக்கும் விஷயத்தைக் கூறுகிறேன். என்னுடைய பாபப் பிறவியைப் போல உலகத்தில் வேறு எங்கு மிருக்கா தென்றே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்; என்னைக் கடவுளே மோசம் செய்து விட்டார் எனின், மனிதர்கள் மோசம் செய்ததைக் கேட்க வேண்டுமா!...மதியீனம்!... கடவுள் என்ன செய்வார்? என்னுடைய விதி...தலைவிதி... என்னை வஞ்சித்துப் படுகுழியில் தள்ளி விட்டது. அவ்வாறு தள்ளிய பிறகு நான் நடைப் பிணமாகவே உலாவுகிறேன். என் விதி எனக்கு என்ன பட்டமளித்தது...ஆ!...விதவை ...கைம்பெண்...அமங்கலை...என்ற பட்டத்தை எனது 8-வது வயதிலேயே அளித்து விட்டது.

அப்போது நான் கேவலம் சிறுமி யாதலால் ஒன்றுமே தெரியாது. என் தாயார் பெண் பேயென்று கூறத் தக்க மகிமை வாய்ந்தவள். என் பாட்டியார் பிரம்ம ராக்ஷஸி என்பதில் ஐயமே இல்லை. என் பிதா எனது 7-வது வயதில் உலகை விட்டொழிந்தார். கல்வி வாசனை யறியாத கசடர்களின் கையில் சிக்கி நான் பட்ட பாடு ஈசனுக்கே வெளிச்சம். 8-வது வயதிலேயே விதவைக் கோலத்தைச் சம்பூர்ண மனத்துடன் சூட்ட என் பாட்டியும், அத்தையும், தாயாரும் தலை கீழாகத் தவித்தார்கள்; எங்கள் வீட்டில் குடி இருந்த ஓர் வாத்தியாரம்மாவினுல் அந்த கோலத்தில் மூழ்காது தப்பினேன்.

எனக்கு 12 வயது ஆகிய பிறகே விதவை என்ற நோய்

நம்மைப் பிடித்து விட்டதை அறிந்தேன்; கணவன் யார்! விவாகம் எப்போது ஆயிற்று. எப்போது அவன் இறந்தான் என்ற ஒரு விஷயத்தையும் நான் சற்று மறிய மாட்டேன். பெரியோர்கள் சில நாட்கள் நினைத்துக் கொண்டு காலையில் பொழுது விடியும் முன்னர் பெரியதாக ஒப்பாரி வைத்து என்னைச் சூழ்ந்து கொண்டு புலம்புவார்கள். அதனுடைய தகவல் எனக்குத் தெரியாது. பிறகு அவர்கள் பேசிக் கொள்வதிலிருந்து எனக்குக் கல்யாணமானதும், அவன் இறந்ததும் தெரிய வந்தது. அந்த மனிதனுக்கு 10 வயது முதல் காசநோயிருப்பதை யறிந்தும் என் பாட்டி தன் தம்பி மகன் என்ற விசுவாசத்தினுல் வேண்டுமென்று விவாகம் செய்ததாயும் அவன் வெகு விரைவிலேயே போய்விட்டதாயும் தெரிய வந்தது.

15-வது வயதில் நான் புத்தி யறிந்த பிறகு என்னை வீட்டில் செய்யும் சித்திரவதையைக் கூறத் திறமன்று. எல்லோரும் எழுந்திருப்பதற்கு முன் எழுந்திருப்பதும், படுத்த பிறகு படுப்பதும், அதற்கிடையில் செக்கு மாட்டிற்கும் எனக்கும் வித்தியாசமே இன்றி உழைப்பதுமாக விருந்தது. தப்பித் தவறி ஒரு தினம் சற்று தாமதமாகிவிட்டால் பெற்ற தாயே தடி கொண்டு அடித்து என்னைக் கண்டவாறு திட்டி வதைப்பாள்.

"அங்கு நின்று எவனைப் பார்த்தாய்? அறுத்த முண்டைக்கு அங்கு வேடிக்கை என்ன? கம்மண்டாட்டிக்குக் களியாட்ட மென்ன! ஏன் வேண்டுமென்று எதிரே வருகிறுய்!...ஐயோ!...அந்த முண்டை எதிரே வந்தது:என் வேலை எல்லாம் மண் விழுந்து விட்டது"...என்று இப்படி எல்லாம் வீட்டுக்காரர்களும் வெளியார்களும் என்னைத் தினம் ஏசியது கணக்கில்லை. நான் ஒரு தரத்திற்கு மேல் சாப்பிட்டு விட்

டாலோ, "தின்று கொழுத்து யார் குடியைக் கெடுக்கப் போகிருயடி முண்டை!" என்று என் தாயாரே கேட்பாள். வீட்டில் யாருக்கேனும் உடம்புக்கு வந்தால் "ஐயோ! அவர்களுக்கு வந்தது இந்த சனியனுக்கு வரலாகாதா!" என்பார்கள். ஊரில் யாரேனும் இறந்து விட்டால் எல்லோரும் என்னைப் பார்த்துப் பார்த்து மார்பி லடித்துக் கொண்டு "இந்த முண்டை சாகக் கூடாதா! இந்த சனியன் சாகக் கூடாதா?" என்று கதறுவார்கள்.

ஐயா! அக்காலேயி லெல்லாம் இப்பாவியின் மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை நினைத்தாலும் பகீரென்கிறது. என் போதாக் கால விதியால் என்னுடன் பிறந்த சகோதரி ஒருத்தி இறந்து விட்டாள். ஊரில் பிணம் விழுந்தாலே என் தலையில் இடி விழும்போது, வீட்டில் கேட்க வேண்டுமா! அது வரையில் இக் கட்டையில் பொறுமை யிருந்தது. அதற்குமேல் பொறுமையை வகிக்க முடியவில்லை. "கடவுள் என்னை ஏன் எடுக்கக் கூடாது. இப்படி மோசம் செய்து விட்டாரே!" என்று கதறினேன்.

வீட்டிலிருப்பவர்க ளறியாது குளத்தில் விழுந்து, பிராணனை விட்டு விடச் சென்றேன். அதை எப்படியோ வாத்தியாரம்மாள் தெரிந்து கொண்டு என் பின்னுலேயே வந்து என்னைத் தடுத்து "அம்மா! பொறுமையில் நீ பூமி தேவிதான் என்று நான் நினைத்திருக்கிறேன். அத்தகைய நீ கேவலமாகத் தற்கொலை செய்து கொள்வது சற்றும் பொருந்தாத காரியமாகும். அதைப்போல பாவம் உலகத்தில் வேறு எங்கேயும் கிடையாது: மனித ஜென்மம் எடுப்பதன் தத்துவமென்ன! அதன் மகிமையை அறியாது அனுவசியமாக இறந்து, அலகையாகப் பிறந்து, பலர் கையிலும் சிக்கிச் சித்திரவதையை யனுபவிப்பதை விட மானிட

ஜென்மமெடுத்த ஒவ்வொருவருக்கும் உள்ள கடமையை உணர்ந்து அதன்படி பரோபகாரம் செய்து உன் வாழ் நாளைக் கடத்து. இவ்விதம் செய்யாதே! மனித ஜென்மத் தின் முக்கிய தத்துவமானது பிறருக் குழைப்பதே யாகும். பிறர்க்கு உதவி புரிந்தால், ஜீவ காருண்யத்துடன் உழைத் தால் கடவுளின் பரிபூர்ண கடாக்ஷத்திற்குப் பாத்திரமாக லாம். வீணாக இவ்விதம் செய்யாதே!'' என்று பல்வேறு நீதி களை ஓதி பல உதாரணங்களைக் கூறி என்னைத் தடுத்தார்.

அந்த சமயம் அவைகள் உசிதமாக என் புத்திக்குப் பட்டன. ஆகையினால் நான் அந்த அம்மாளின் உதவியைக் கொண்டே நந்தபுரியில் ஸேது லக்ஷ்மியம்மாள் அமைத்துள்ள அனாதைச் சங்கம், ஜீவகாருண்ய சங்கம்: என்பதில் என் வீட்டார் அறியாதபடி சேர்ந்து விட்டேன். சில நாட்களுக் குள் வாத்தியாரம்மாளும் அதே சங்கத்தில் சேர்ந்து விட் டார்கள். வீட்டில் காணாதவுடன் பலவிதமான பழிகளுக்கு என்னை ஆளாக்கி வசை மாரியைச் சொறிந்தார்களாம்.

சில மாதங்கள் சென்ற பிறகு இங்கிருப்பதை அறிந்து என்னை அழைத்தார்கள். "நான் இறந்து விட்டதாகவே எண்ணி விடுங்கள்! என்னுடைய பரிசுத்தம் பகவானுக் குத் தெரியும். அவனுக்குப் பொதுவாக நான் நடந்தால் போதும். இனிமேல் நான் அந்த இடத்திற்கு வர முடி யாது'' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டேன். அதோடு என்னை அச் சனியன் விட்டது என்றே கூறலாம்.

வாத்தியாரம்மாளின் பேருதவியால் எனக்குள்ள துய ரக் கடலில், கல்வி யறிவாகிய கரை ஏற்பட்டு கரையேறி னேன்; ஜீவகாருண்யச் சங்கத்தின் நோக்கமாவது:—யாரா யினும் சரி; அபாயத்தி லிருப்பவர்களுக்கு உபகாரம் செய் தல் வேண்டும் என்பதே யாகும். அம் முறையிலேயே தமக்

கும் செய்தேன். நான் சில வருடங்களில் நன்ருகப் படித்துத் தேறியதோடு ஜீவ காருண்ய சங்கத்தில் பலருக்கு உதவி புரிந்த பெரும் புகழையும் அடைந்தேன்.

எங்கள் வித்யாலயத்தின் வேலைகள் முடிந்த உடன் தம் தம் இஷ்டப்படி வேலைக்கு அமருவதோ, விவாகம் செய்து கொள்வதோ, அன்றி ஆசிரம வாசத்தையே அனுஷ்டிப்பதோ முதலிய வழிகள் விதித்திருக்கின்றன. என் வீட்டிலிருந்து வந்த வாத்தியாரம்மாள் என்னை ஈன்ற தாயாகவே இருந்தார்கள். அவர்களுடன் நான் ஜீவ காருண்ய நிலயத்திலேயே வசித்து வருகிறேன். என்னை விவாகம் செய்து கொள்ளும்படி என் வாத்தியாரம்மாள் பல முறை கூறியதுண்டு. அக்காலை எல்லாம் நான் மறுத்தே வந்தேன்; கைம்பெண்ணிற்குக் கல்யாண மேன் என்ற எண்ணமே ஊசலாடியது.

நான் பாவமென்றும் அறியவில்லை; புண்ணிய மென்றும் தெரியவில்லை. என் விதியில் இதுவும் ஒரு கூற்று என்றே நினைக்கிறேன்: எனக்கு இப்போது 22 வயது ஆகிறது. சென்ற சில வருட காலமாகத் தங்கள் கம்பெனியில் நான் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டதும், அதற்குப் பிறகு மானேஜராக விருப்பதும் என் ஜீவனத்தின் பொருட்டு அமர்ந்ததேயாகும்: இக்காலத்திற்குள் என்னைக் கெடுப்பதற்கும் அடியோடு அழிப்பதற்கும் எத்தனையோ துஷ்டர்கள் முற்பட்டார்கள்: அந்த விபத்திற்கெல்லாம் சிக்காமல் தப்பித்துக்கொண்டு வருகிறேன்: இந்திராணி என்பவளை நான் நன்கறியாவிட்டாலும் அவள் மகா கெட்டுப்போனவள் என்று முன்னரே அறிவேன்: அவள் இங்கு வேலைக்கு வந்தது முதல் அவளை நான் ஒரு கண் கவனித்துக்கொண்டே வந்தேன்: இதற்குக் காரணம், தங்களுக்கு அவர்கள் பெரும்

கேடு விளைவிக்கப் போகிறார்கள் என்பதை எப்படியோ என் மனத்தில் ஒன்று கூறியது.

ஏன் ஒளித்துப் பேசுவானேன்? என் மானஸீகமாகத் தங்களிடம் என் பொல்லாத மனத்தில் முடவன் கொம்புத் தேனை விரும்புவது போல என்னையறியாத ஆழமான அன்பு உண்டாகிவிட்டது. தங்களிடம் என்னையே நான் அடிமை என எண்ணி உழைக்கத் தொடங்கினேன். எனினும் விதவை என்கிற கவசமிருக்கிறதே: அது எல்லாவற்றையும் மறைத்து மலைபோலத் தடுத்து நின்றதால் நான் என் மனத்திற்குள்ளேயே வைத்துத் தமக்கு ஏற்பட விருக்கும் தீங்கைக் களைய வேண்டிக் கங்கணங் கட்டிக்கொண்டேன். துஷ்ட நேயர்களின் விஷமம் நாளுக்கு நாள் விருத்தியாயிற்று.

தம் கையிலுள்ள ப்ளானை அபகரிக்கவே முதல் பிரயத்தனம் செய்தார்கள்: தங்களையும் தங்கள் தாயாரையும் வசியம் செய்துகொண்டு ஏமாற்றவே இந்த பாதகியை இங்கு வேலைக்கு அமர்த்தினார்கள். இவர்கள் நம் கம்பெனிக்கு எதிர் வாடையிலுள்ள சுந்தர விலாஸ் ஓட்டலில் தான் சந்திப்பது வழக்கம்: அவ்வோட்டலே சோதாக்களுக்கு இடமளிக்கும் போக்கிரி ஓட்டல் என்று பெயர் பெற்றது.

அதில் அவர்கள் சந்திப்பதை நான் கண்டுபிடித்து நானும் அவர்களறியாமல் அங்கு சென்று அவர்கள் பேசுவதை எல்லாம் கவனித்தேன்; ஒரு டீ பார்டி என்ற வியாஜத்தை வைத்து உங்களை வரவழைத்துப் பிளானைப் பிடுங்கிக்கொண்டு, உங்களையும் கொன்று விட்டுக் கம்பெனியை தமக்கே சுவாதீனம் செய்துவிடுவது என்று சதியாலோசனை செய்து அதற்குத் தக்கபடி ஊர்க் கோடியில் இடத்தை அமர்த்திக் கொண்டார்கள்.

இதை நான் தாங்களறியும் பொருட்டு மொட்டைக்

காகிதம் ஒன்று எழுதி தங்கள் மேஜைமேல் வைத்தேன்; அதை நீங்கள் லக்ஷ்யம் செய்யாது புறப்பட்டு விட்டீர்கள்; நான் எனது தலைவியின் பேருதவியைக் கொண்டு மோட்டாரில் மாறு உருவத்துடன் வந்து போலித் துப்பாக்கிகளை நீட்டிப் பயமுறுத்தி, உங்களிடமிருந்து ப்ளான் உள்பட சகலத்தையும் பிடுங்கிக் கொண்டோம். அப்படிச் செய்தால் நீங்கள் அங்கு செல்லாது திரும்பி விடுவீர்கள் என்று தோன்றியது. தெய்வாதீனமாக நீங்கள் திரும்பினீர்கள். கெட்டுப் போன ப்ளான் பொய் ப்ளான் என்று அந்த பாதகி யிடம் கூறும்படியான புத்தியையும் கடவுள் உங்களுக்குக் கொடுத்தார்.

அந்த துஷ்டக் கூட்டத்தினர்களில் இருவர் காணும விருப்பின் சந்தேகம் அவர்களுக் குள்ளேயே செல்லும் என்ற முன் யோசனையினால் போலீஸாரின் உதவியைக் கொண்டு அவர்களைப் பிடித்துச் சிறையிலிட நினைத்தேன்- தெய்வ சகாயத்தினால் அதன் முன்னரே அவர்கள் ஒரு குழந்தையின் காப்பைத் திருடியதினால் சுலபமாகப் பிடிபட்டு அவர்களின் கூட்டத்திற்கே தெரியாம லடைக்கப்பட்டார்கள்.

நீங்கள் பறி கொடுத்த ப்ளான் பொய்யானது என்று கூறியதும், அவர்கள் அசல் ப்ளானைக் கொள்ளை யடிக்க மீண்டும் ஏற்பாடு செய்தார்கள். உங்களை மயக்க அவர்கள் எண்ணியதும், அவர்களை மயக்க நீங்களும் உங்கள் தாயாரும் எண்ணியதும் இரண்டையும் நானறிந்தேன். அச் சமயம் ப்ளான் என்னிடமிருப்பதைத் தெரிவித்தால் மோசமாய் விடும் என்று தோன்றியது. போலீஸார் உதவியைக் கொண்டே நான் வேலை செய்ததால் அக் கூட்டத்தைப்

பிடித்துத் தருவதாகச் சொல்லி இருந்தேன். அதற்கு இச் சமயமே ஏற்றதாகும் என்று நம்பினேன்.

இன்று அவர்கள் கூடி ஒட்டலில் பேசியதை நானும் போலீஸாரும் கவனித்து உங்களுக்கு மயக்க முண்டாவ தற்காக வைத்த பாலை அவளே குடிக்கச்செய்து அதற்கு மேல் நாங்களே ;முக மூடியுடன் வர நினைத்துத் தீர்மா னித்து விட்டோம்; இனிமேல் நடக்க வேண்டியதை நீங்களே காண்பீர்கள். இனியும் தங்களை வருத்தாது இதை எழுதி, ப்ளானை வைக்கிறேன்; என்னுடைய கடமை என்று நான் செய்யப் புகுந்தேன்; குற்றங்க ளிருப்பதை மன்னிக்கவும்.

இன்னொரு முக்கிய விஷயம்.

நான் மேனேஜர் வேலையைப் பூண்டு செய்து வருங் காலையில் தமது மேஜையினருகில் வரும் காரணங்கள் பல சமயம் ஏற்பட்டபோது தமது டைரியைத் தாமறியாமல் பார்க்க நேர்ந்தது பற்றி மன்னிக்கவும். அப்படி பார்ப்பதற்குக் காரணம் இப் பாவியைப் பற்றித் தாம் ஏதோ எழுதியதை அகஸ்மாத்தாகக் கண்ணுற்றதும் இன்னும் என்ன விருக்கும் என்பதைக் காண ஆவல் தூண்டியதால் தான். மகா கொடிய பாபத்தைச் செய்த கட்டையாகிய என்மேல் தாங்களும் காதல் கொண்டிருப்பதை யறிந்தேன்; திடுக்கிட்டேன்.

அன்பரே! நான் இன்னாள் என்பதை யறியாது தாங்கள் அப்படி நினைத்திருக்கலாம். தங்கள் அன் பிற்கு இலக்காகி விடாமல் இடையில் விதவை என் கிற எரி மலை படுத்திருப்பதை யறியுங்கள்; காதலுக் குப் பாத்திரமற்ற கைம்பெண் என்பதை யறியுங்கள். இதுவே முக்கிய செய்தி யாகும். இரவு நடத்த விரும்

கும் காரியம் ஜெயமாகிய பிறகு மற்ற விஷயங்களைப் பேசலாம்.

இங்ஙனம் தங்கள் ஊழியை
சிந்தாமணி.''

இந்த பிரம்மாண்டமான கடிதத்தைப் படிக்க அவனுக்கு வியப்பும், களிப்பும், திகைப்பும் சினிமாப் படம் போலத் தோன்றுகின்றன. தாங்க முடியாத சந்தோஷத்துடன் மாறி மாறித் தன் தாயிடத்தில் ஓடி இக்கடிதத்தைப் படித்துக்காட்டினன். ''அம்மா! இதோ ப்ளான்! இதோ ப்ளான்'' என்று கூறித் தாயார் கையில் கொடுத்தான்.

இவ்விதமாக விருக்குமென்று பொன்னம்மாள் சற்றும் எதிர் பாராமலிருந்ததால் அபாரமான ஆச்சரியத்தையடைந்து ''ஆகா! என்ன விநோத சம்பவங்கள் நடந்துள்ளன! தாமோதரா! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே! அக்காரிகையை அப்படியே இறுகத் தழுவி யணைத்துக் கொள்ள என் மனம் விரும்புகிறதே! உத்தமி என்று நாம் கொண்டாடியவாறு இருந்ததற்கு நமக்குப் பலன் அளிக்கும் உத்தமப் பதுமையாகவே அமைந்துவிட்டாள். ஆகா!... என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!! அன்று நம்மை மிரட்டிப் பையை அபகரித்தது இம்மாதரசியா!'' என்று தாயும் மகனும் ஆச்சரிய, ஆநந்த சாகரத்தில் மூழ்கினர்கள்.

இதே பேச்சுக்களைப் பேசியவாறு ''இரவு எப்போது தலையும்? சூர்ய உதயம் போன்ற சிந்தாமணியை எப்போது காணலாம்?'' என்று இருவரும் ஏங்கி எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிந்தாமணி எவ்வித மிருந்தாள் என்பதைக் கூறவேண்டுமா! இருவரும் பொழுது புலர்வதையே எதிர்நோக்கி நின்றனர்.

உதயமாயிற்று. சிந்தாமணி வெகு வணக்கமாக, கம்பீர

மான தோற்றத்துடன் வந்தாள். அவளைக் கண்ட உடனே பொன்னம்மாள் கட்டு மீறிய களிப்புடன் வாரியணைத்து இறுகத் தழுவி சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்றாள். தாமோதரன் அப்போதும் லஜ்ஜையினால் தலை குனிந்து நின்றான். எனினும் மனத்திலுள்ள பெருமிதமான உணர்ச்சியைத் தடுக்க முடியாது சிந்தாமணியின் இரு கரங்களையும் பிடித்துத் தன் கண்ணில் ஒற்றிக்கொண்டு "அம்மணீ! சிந்தாமணீ! இக்கரங்களின் சொந்தக்காரனாக நான் என்று ஆகப் போகிறேன் என்று எதிர் நோக்கிக் கடவுளைத் தவம் செய்து வந்தேன்! இன்றே அதை எனக்கு உவந்தளித்தார்போலும். நீ நினைத்தபடி விதவை என்ற பட்டம் உன்னைத் தாக்கவில்லை. உன்னை மாசு படுத்தவில்லை; மகா கொடிய இருதயத்தை யுடைய உன் பெற்றோர்களையே தாக்கியது. அந்த எண்ணத்தை அறவே ஒழித்துவிடு. இனி இக்கரத்தை நான் விடமாட்டேன்'' என்றான். ஆநந்தக் கண்ணீர் மூவரையும் நீராட்டியது.

சிந்தாமணி நாக்குழற "ஐயோ! விதவை! கைம்பெண்! ஒன்றுக்கும் உதவாக் கட்டையாகிய என்னை நேசிப்பது தகாது.'' என்று கூறிப் புலம்பினாள். உடனே பொன்னம்மாள் அவளைத் தேற்றி, தன்மீது சாய்த்துக்கொண்டு "செல்வீ! நீ விதவையே யல்ல என்பதை நாங்கள் உறுதியாக எண்ணி இருக்கையில் உனக்கேன் அக்கவலை! நீ வீண் கவலை கொள்ளலாகாது. இன்றுமுதல் நீ வேறல்ல! என் செல்வக் கண்மணி நீதான்! உன் ஆச்ரமவாசிகளின் விருப்பத்தின்படி நீ விவாகம் செய்து கொள்ள வேண்டிய ஏற்பாட்டை நானே செய்துவிடுகிறேன்! கூடிய சீக்கிரத்திலேயே இக்காரியம் நடைபெறவேண்டும்!'' என்றாள்.

ஒன்று கூடிய மனத்தினரின் உற்சாகக் களிப்பைக் கூற

முடியுமா? அன்று முழுதும் மூவரும் பேசிப் பேசி ஆநந்தத்தை அள்ளிக் குடித்துக்கொண் டிருந்தார்கள்: தனக்கு ஆதியில் உதவி புரிந்த புனிதவதியும் சிந்தாமணியே என்பதையறிந்து தாமோதரன் இன்னும் அடங்கா மகிழ்ச்சி யடைந்தான்: பிறகு ஆடம்பரமே இன்றி வெகு சாதாரணமாக விவாகத்தைச் செய்துவிடத் தீர்மானித்தார்கள்: சிந்தாமணியின் ஆதிகாலத்து டைரியையும், தாமோதரனின் டைரியையும் இருவரும் மாற்றி மாற்றிப் படித்துப் பேராநந்த மடைந்தார்கள.

சிந்தாமணியை அவதூறுக்கு ஆளாக்கித் திட்டிய தாயாரே அவள் நல்ல சம்பாத்தியத்தில் இருக்கிறுள் என்பதை யறிந்ததும் அவளை மாதா மாதம் பண மனுப்பும்படியாகக் கடிதம் மட்டும் எழுதத் தொடங்கிஞள். சிந்தாமணி பழங் கதைகளை நினையாமல் தன்னை ஈன்ற அன்னை என்கிற அபிமானத்திஞல் மாதாமாதம் தன் கையில் கிடைத்ததை யனுப்பி வந்தாள்: தன் விவாகத்தைப் பற்றி பிறகு தெரிவதற்கு முன் ஒரு கடிதம் எழுதிவிடுவது மேலானது என்று நினைத்துத் தாயாருக்கு மட்டும் கடிதம் எழுதிஞள்:

அன்றலர்ந்த கமலம் போன்ற முக தேஜஸுடன் மண மகனும், மண மகளும் மணவறையில் விளங்கிஞர்கள்: ஆடம்பரமே இல்லாது வெகு சாதாரணமாக விவாகச் சடங்குகள் நடந்தேறின. மணவறையில் தம்பதிகள் வீற்றிருக்கையில் மணமகளின் தாயார் பூர்வ காலத்து மமகாரங்கள் முற்றும் ஒழிந்துபோய் வற்றியுலர்ந்த கட்டையைப் போல வந்து மணவறையி லிருக்கும் ரதியும் மன்மதனும் போன்ற தம்பதிகளைக் கண்டு ப்ரமிப்பு கொண்டாள்.

இந்த அம்மாள் வருவதைக் கண்ட பொன்னம்மா

ளின் சரீரமே நடுங்கியது. "ஹா! நாகப்பாம்பு இங்கேயும் இத்தனை வருடங்கள் சென்று வந்துவிட்டதே!" என்று திடுக்கிட்டாள்: அதே சமயம் மணமகளைத் தாயார் தழுவிக் கொண்டு, "என் செல்வி! மகா பாவி என்னாலேயே நீ இது காறும் பட்ட கஷ்டங்கள் போதும். ஈசன் கிருபையால் இனி சுகமே மங்களமாக வாழ்வாயாக." என்று ஆசீர் வதித்தாள்.

மணமகளும் தன் தாயை மாமிக்கு அறிமுகம் செய்து வைக்கத் திரும்பினாள்; அதற்குள் பொன்னம்மாள் "அக்கா! நமஸ்காரம்;கடவுளின் செயல் கூறமுடியாதது:என்னருமைக் கண்மணி தங்கள் புதல்வியா? இதோ! உங்கள் மருமகனே, மருமகனாகி விட்டான்: ஈசனின் பிரிய கடாக்ஷத்தைப் பாருங்கள்: தாமோதரா! அத்தைக்கு நமஸ்காரம் செய்: இவர்தான் நம்மை ஆதியில் காப்பாற்றிய அத்தை:உன் பிதா வுடன் பிறந்தவர் இவர்தான்: ஆகா! என்ன ஆச்சரியம்!" என்று திகைத்தாள்: தாமோதரனும் வணங்கினான்.

இந்த விதமான பந்துத்வ மிருக்கு மென்று சற்றும் எதிர்பாராத மணமகளுக்குக் கூறத் திறமற்ற வியப்பு உண் டாகிவிட்டது. அவள் தாயார் கல்லாகவே சமைந்துவிட் டாள்: பிறகு ஒருவாறு தேறி, "ஆகா! தாமோதரா! என் கண்ணே! என் குற்றங்களை மன்னிப்பாயாக! பொன்னம்மா! உன் விஷயத்தில் நான் பெரும் பாவம் செய்துவிட்டேன்; மகா அபராதம் செய்துவிட்டேன்: என்னை க்ஷமிக்கவேண் டும். உங்களை நான் செய்த வதைக்குப் பலன் இந்த ஒரு குழந்தையை இவ்விதம் அலையவிட்டேன். மற்றவைகளை எமன் கொண்டுபோய் விட்டான்: கஞ்சிக்குப் பறக்கும் பஞ்சையாக ஆகி சகல வித கஷ்டமும் பட்டுவிட்டேன்: உங்கள் கம்பெனியிலேயே வேலை செய்து, உங்கள் பணத்தி லேயே நான் பிழைக்கும்படிக் கடவுள் செய்துவிட்ட ஆச் சரியத்தை என்னென்பேன்? நீங்களும் இப்பாவியை மன்

னிக்கவேண்டும்.'' என்று கண்ணீர் விட்டாள்: வியப்பின் மேல் வியப்பாகவே எல்லாம் மாறின. விவாகமும் விமரிசை யாக நடந்தது.

எல்லோரும் ஒரே குடும்பத்தினராகப் பிறந்ததுபோல ஒரே குடும்பத்தினராகி விட்டார்கள். ஜெய ஸஞ்ஜீவி வைத் தியசாலையின் ஏஜெண்டாக வேலையிலிருந்த அம்மாள் தற் போது எஜமானியாகியும், அப்போதும் தன் வேலையைத் தானே கவனித்து, வரும் ஸ்திரீகளுக்கு மருந்து கொடுப்ப தும், பக்கத்தில் இவைகளைக் கணக்கு பார்க்கும் தன் பர்த் தாவுக்குக் களிப்புற வியாபாரம் நடத்துவதுமாக விளங்குகி ருள். திருடர்களைப் பிடித்துக் கொடுத்ததற்காக கவர்மெண் டாரால் ஓர் தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்ருள். தன் விவா கத்தின் பயனுக அடுத்த வருடம் பொங்கல் பண்டிகை யன்று பொங்கல் பரிசாகத் தன் பர்த்தாவுக்கு ஒன்றும் மாமி யாருக்கு ஒன்றுமாக இரட்டைக் குழந்தைகளாக ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாகஅளித்தாள். பொன்னம்மா ளுக்கும் தாமோதரனுக்கும் இப்பொங்கல் பரிசைப் பெற் றுப் பொங்கிய களிப்பை விட வேறு நித்திய மங்கள வைபவ சுகமும் வேண்டுமா! பொங்கலன்று கிடைத்த பரிசாகிய குழந்தைகளுடன் "பொங்கலோ! பொங்கல்! உலகம் முற் றும் இவ்விதமே பொங்கிக் களிக்கவேண்டும்!'' என்று வாழ்த்தி விளையாடுவதைத் தவிர வேறு வேலை என்ன? மங்களம்.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னர்
அழுதகண் ணீரு மனைத்து.—திருக்குறள்.

சுபம்! சுபம்!! சுபம்!!

"ஜெய ஸஞ்ஜீவி" முற்றிற்று
ஓம் தத் ஸத்.

PRINTED AT THE TATA PRESS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

# ஜகன்மோகினி

மாதாந்த நாவல் ஸஞ்சிகை.

ஆசிரியை:

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

வருஷ சந்தா ரூ. 1-8-0] [தனிப்பிரதி அணா

---

ஸ்ரீமதி

## வை. மு. கோதைநாயகி அம்மாள்

### எழுதிய நாவல்கள்

| | | ரூ. |
|---|---|---|
| வைதேகி (2-பாகங்கள்) | .... | 2 |
| பத்மசுந்தரன் | .... | 2 |
| ராதாமணி (2-பாகங்கள்) | .... | 2 |
| சாருலோசனா (2-பாகங்கள்) | .... | 2 |
| காதலின் கனி | .... | 2 |
| [illegible]கிருஷ்ணன் | .... | 2 |
| ருக்மிணீகாந்தன் | .... | 2 |
| சாமளநாதன் | .... | 2 |
| சண்பகவிஜயம் | .... | 1 1 |
| கௌரீமுகுந்தன் | .... | 1 1 |
| [illegible]ரமதி | .... | 1 1 |
| சோதனையின் கொடுமை | .... | 1 |
| பரிமளகேசவன் | .... | 1 |
| உத்தமசீலன் | .... | 1 |
| சுகந்தபுஷ்பம் | .... | 1 |
| கதம்பமாலை | .... | 1 |
| கோபாலரத்னம் | .... | 0 1 |
| நளினசேகரன் | .... | 0 |
| வீரவஸந்தா | .... | 0 |
| மூன்று வைரங்கள் | .... | 0 |
| படாடோபத்தின் பரிபவம் | .... | 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.